
# அதாவது

## சித்திரை – 2005

2 ஆவது











அறிவியல் சஞ்சிகை

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# N.V.P. Hardware & Communication

சகல விதமான கட்டிடப் பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

**என்.வி.பி.ஹாட்வெயர் அன்ட் கொமினிக்கேசன்**

**பருத்தித்துறை வீதி , அறிவாலயம் ,**
**இமையாணன் , உடுப்பிட்டி.**

**T.P.NO : 021 - 2263517 , 0602 - 212754**



* அழகுசாதன உருக்கள்
* வசீகரமான பாதணிகள்
* பாடசாலைப் பொருட்கள்
* அலங்காரச் செதுக்கல்



என எழிலுலகே இங்கு பதுக்கல்

பிரியங்கா **வல்வெட்டித்துறை ,**
**உடுப்பிட்டி.**



# Priyanka

**V.V.T.ROAD, UDUPPIDDY.**

**PROPRIETOR : V.KANDASAMY**

*Stationaries , Fancy Good and Complements are available here.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதாவது

"அறிவே இறை என்று அறி"

அறிவியற் தமிழோடு
தொடங்கிய
எங்களின் பயணத்திற்கு
மதிப்பளித்து,
அறிவுப் பசியோடு,
"அதாவது" வாங்கிய
அனைவருக்கும்
நெஞ்சம் நெகிழ
நன்றிகூறி மகிழ்கின்றோம்.

"அதாவது"
உங்களை
திருப்திப்படுத்தவில்லையெனில்
உரிமையோடு
விமர்சியுங்கள்.

நன்றி

முகவரி : "அதாவது"
யா/உடுப்பிட்டி அ.மி.க.
வல்வெட்டித்துறை.

அட்டை வடிவமைப்பு :
மா.மகேந்திரன்,
நிதுஷா ஸ்ருடியோ,
நெல்லியடி.

## உள்ளே....


- அமில மழை 02
- பச்சோந்தி 06
- பில்கேட்ஸ் 07
- ஐ.நா.சபை 08
- தகவல் வங்கி 27
- அப்படியா? 28
- ஸ்பில்பெர்க் 29
- கணிதாசன் பதில்கள் 30
- தண்ணீர் தேசம் 34
- நிக்ஸன் 43
- சினிமா 44
- "சந்திரமுகி" விமர்சனம் 46
- எறும்பு தின்னி 47
- சேகுவாரா 48


விலை 30/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிலமழை

ர.யசோதரன்

உலகச்சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப மனிதனின் நாளாந்த நுகர்வுத் தேவையும் அதிகரிக்கின்றது. அத்துடன் புவிக்கோளம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்று சூழல் மாசடைதல். சூழல் தொகுதியில் மனிதன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தும் விரும்பத்தகாத அல்லது பாதகமான பெரும்பாலும் மீளமுடியாத விளைவுகள் சூழல் மாசடைதல் எனப்படும். சூழல் மாசடைதலில் பிரதான இடத்தை வகிப்பது வளி மாசடைதல் ஆகும். வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு வாயுக்கள் , விலங்குப் பண்ணைகளில் இருந்து வெளியேறும் அமோனியா போன்ற வாயுக்கள் காரணமாக அதிகளவில் வளி மாசடைகின்றது. வளி மாசடைவதால் சில பாரதூரமான விளைவுகளில் ஒன்றாக அமிலமழை விளங்குகின்றது.

மழைநீரில் சாதாரணமாகவே மிகச்சிறிய அளவில் அமிலம் காணப்படுகின்றது. பஞ்சுபோன்ற மழை மேகங்கள் படிப்படியாகப் பெரிதாகி இறுக்கமடைந்து கருமேகமாக மாற்றமுறுகின்றது. இந்நிலையில் இடிமுழக்கத்துடன் மழை உருவாகும். அத்துடன் பலத்த மின்னலும் காணப்படும். இடிமின்னல் காரணமாக நீரில் இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதால் அமிலமழை ஏற்படுகின்றது. இதன்படி இடிமுழக்கத்துடன் கூடிய மின்னலுடன் கீழே விழும் மழையில் ஓரளவு நைதரசன் அமிலம் கலந்திருக்கும். இதனைச் சாதாரணமாக " இடிநீர்" என்று கூறுவர்.

விஞ்ஞான முன்னேற்றம் காரணமாகவும், கைத்தொழிலாக்கத்தினாலும், தொழிற்சாலைகள், மோட்டார் வாகனங்கள், அனல்மின் நிலையங்களில் இருந்து வெளியேறும் கந்தகம் (சல்பர்), நைதரசன் போன்றவைகளின் ஒட்சைட்டுக்கள் வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசனுடனும், நீராவியுடன் அல்லது மழைநீருடன் கலந்து சல்பூரிக்கமிலம் ($H_2SO_4$), நைத்திரிக்கமிலம்($HNO_3$) ஆகியன உருவாகி மழையாகப் பெய்வதே அமிலமழையாகும். இதனால் இயற்கைச் சமநிலை குலைந்து உயிரினங்களின் வாழ்விற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

இயற்கையாகவே எரிமலையிலிருந்து கந்தகவீரொட்சைட் ($SO_2$), நைதரன் ஈரொட்சைட் ($NO_2$), காபனீரொட்சைட்டு ($CO_2$) உருவாகின்றது. கைத்தொழிற்பேட்டை , தொழிற்சாலை சுவட்டு எரிபொருட்களின் எரிதல் என்பவற்றில் இருந்து கந்தகவீரொட்சைட் ( $SO_2$ ) உருவாகும். மின்னலின் மூலமும் கைத்தொழிற்சாலையிலிருந்தும் உருவாகும் அமில தூமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் நைதரசன் ஈரொட்சைட் ($NO_2$) உருவாகும். உயிர்ச்சுவட்டு (Fossil fuel) எரிபொருட்களின் பாவனை , தாவரங்கள் ஒளித்தொகுப்பு , உயிரினங்களின் சுவாசம் , காடழிப்பு போன்றவற்றால் காபனீரொட்சைட்டு ($CO_2$) உருவாகின்றது. இவ்வாறு உண்டான கந்தகவீரொட்சைட் ( $SO_2$), நைதரசன் ஈரொட்சைட் ($NO_2$), காபனீரொட்சைட் ($CO_2$) நீரில் கரைவதன் காரணமாக முறையே சல்பூரிக்கமிலம் ($H_2SO_4$), நைத்திரிக்கமிலம் ( $HNO_3$), காபோனிக்கமிலம் ($H_2CO_3$) போன்ற அமிலங்கள் உருவாகும். இவையே அமில மழையாகப் பொழிந்து மண்ணில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

கைத்தொழில் நாடுகளில் பெருந்தொகையான கந்தக ஒட்சைட்டுக்களும் , நைதரசன் ஒட்சைட்டுக்களும் வளிக்குள் விடப்படுகின்றன. அமிலமழை கந்தக ஒட்சைட்டுக்களும் , நைதரசன் ஒட்சைட்டுக்களும் வெளியேறும் பகுதிகளில் தான் பெய்யும் என்பதில்லை. அமிலத்துளிகள் காற்றுச் சுற்றோட்டங்களினால் உலகின் பல்வேறு பாகங்களுக்குக் கொண்டு செல்லப்படலாம். அதனால் தான் ஐக்கிய அமெரிக்க கைத்தொழில்கள் வெளியிடும் வாயுக்கள் தங்கள் காடுகளில் அமிலமழையாகப் பெய்து அழிப்பதாகக் கனேடியர்கள் கூறுகிறார்கள். ஜேர்மனியிலும், ஐரோப்பாவிலும் , வேறு பகுதிகளிலுமுள்ள காடுகள் அமில மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன. அமிலங்கள் மரங்களின் குருத்து இலைகளையும் அரும்பையும் எரித்து விடுகின்றன. அமிலமழை பெய்யும் பகுதிகளில் மரங்கள் இலைகள் அற்ற கொப்புகளுடன் உள்ளன.

**இவ் அமில மழையினால் ஏற்படும் விளைவுகளாக .........**

※ சூழலின் சமநிலையைப் பேணுவதில் இயற்கைத் தாவரங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஆனால் அமில மழையின் தாக்கம் இயற்கைத் தாவரங்களை அழிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. அமில மழையின்போது மண்ணில் இருந்து கல்சியம் அயன் ($Ca^{2+}$) , மக்னீசியம் அயன் ($Mg^{2+}$) என்பன கழுவி அகற்றப்படுவதால் தாவரங்களின் கலச்சுவர் விருத்தி , குளோரபில் உற்பத்தி என்பவை பாதிக்கப்படுகின்றன. மேலும் வளிமண்டல கந்தகவீரொட்சைட் ($SO_2$) , நைதரசன் ஈரொட்சைட் ($NO_2$) மாசுக்கள் இலை நடுவிழையத்தைப் பாதிக்கின்றன. மண்ணில் உள்ள அலுமினியச் சேர்வைகள் மழைநீரின் அமிலத் தன்மையினால் கரைவதால் மண்ணீரில் $Al^{3+}$ செறிவு அதிகரிக்கின்றது. இது தாவரங்களுக்கு நச்சு இயல்பு உடையது. மேலும் மண்ணில் கனியுப்பு வளம் குன்றுவதால் தாவர வளர்ச்சி பாதிப்படைவதோடு பயிர்களின் இலை கருகிப் போதல் , பயிர்களின் விளைச்சல் குறைவடைதல் என்பன ஏற்படுகின்றது.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

※ அமிலமழையினால் பொட்டாசியம் அயன் ($K^+$) , மக்னீசியம் அயன் ($Mg^{2+}$) , கல்சியம் அயன் ( $Ca^{2+}$) ஆகிய கனிய அயன்கள் கழுவிச் செல்லப்படுவதால் மண்ணில் அமிலத் தன்மை ஏற்பட்டு மண்வளம் இழக்கப்படுகின்றது. இதனால் மண்ணிலுள்ள போசணைக்குரிய மூல கங்கள் கிடைக்காமல் போவதோடு மண் நுண்ணங்கிகளும் , ஏனைய அங்கிகளும் கொல்லப்படுவதால் உக்கும் செயன்முறை பாதிக்கப்படு கின்றது.

※ நீர் நிலைகளில் அமிலத் தன்மை அதிகரிப்பதால் நீர்வாழ் உயிரினங் களின் தொழிற்பாடு குன்றுகின்றது. பல நீர்வாழ் முள்ளந்தண்டற்ற விலங்கு களின் புறவன்கூடு மெதுமையாக்கப்பட்டு அவை அழிவடைகின்றன.

※ சுண்ணாம்புக் கற்களால் ஆக்கப்பட்ட கட்டடங்கள் , கட்டடங்களின் உலோகத்தாலான பகுதிகள் , கூரைகளை அமிலமழை பாதிக்கின்றது. அத்துடன் வரலாற்றுப் பெருமைமிக்க சிற்பங்கள் தாஜ்மகால் போன் றவை அரிப்புக்குள்ளாகின்றன.

※ ஏரிகள் அமிலமாக்கப்படுவதால் அவை சாவு ஏரிகளாகி உணவுச் சங்கி லித் தொடர் குழப்பமடையும்.

※ அமிலமழை காரணமாக மனித உடலில் உள்ள மெல்லிய இழையங்கள் பாதிப்படைவதோடு கண் , தொண்டை , நுரையீரல் போன்றவை பாதிப் பிற்குள்ளாகின்றன.

போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

உயிர்ச்சுவட்டு எரிபொருட்களான நிலக்கரி , பெற்றோல் போன்றவை அதிகளவு எரியூட்டும்போது அதில் உள்ள மூலகங்கள் ஒட்சியேற்றமடைந்து அமில ஒட்சைட்டுக்களை வளியில் தோற்றுவிக்கின்றன. இந்தியாவில் நிலக் கரியால் இயங்கும் நிலையங்களில் இருந்து மின்சக்தி பெறப்படுகின்றது. இலங்கையில் இருந்து சில மைல்களுக்கு அப்பால் தென்னிந்தியாவில் 630 MW அலகுகள் சக்தி கொண்ட நிலக்கரி , மின்சக்தி நிலையம் அமைந் துள்ளது. இதேபோன்று பிரித்தானியா, ஜேர்மனி, அவுஸ்திரேலியாவில் மின் சக்தி நிலையங்களில் இருந்து பெறப்படுகின்றது. நமது நாட்டில் கொழும்பு நகரத்தில் ஓடும் வாகனங்கள் , மற்றும் சபுகஸ்கந்த தொழிற்சாலையில் எரிக்கப்படும் டீசலில் உள்ள கந்தகத்தின் அளவு அதிகமாக இருப்பதால் வளியில் அதிகளவு அமில வாயுக்கள் விடப்படுகின்றன.

இவற்றுக்கெல்லாம் மேற்கொள்ளக்கூடிய காப்பு நடவடிக்கை களாக உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் தகனத்தைக் குறைத்து மாற்று சக்தி வளங்களை (சூரியசக்தி, காற்றுவலு, உயிரின வாயு) பயன்படுத்துதல்,


அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலக்கரியில் உள்ள கந்தகத்தின் அளவைக் குறைத்தல் , தொழிற்சாலை புகைபோக்கிகள் , போக்குவரத்து சாதனங்களின் புகைபோக்கிகள் வழி யாக வெளியேறும் கழிவு வாயுக்களை வடிகளினூடு செலுத்தி மாசுக்களை வடித்துப் பின்னர் வெளியேற்றல் போன்ற நடவடிக்கைகளைக் குறிப்பிட லாம்.

## அமில மழையினால் தாவரங்களிலும் காட்டு நிலங்களிலும் ஏற்படும் பாதிப்புக்கள்




01. இலை நடுவிழையத்தில் குளோர பில் அழிவடைதல்.
02. இலைகளின் புறத்தோல் பாதிக்கப்படுதல்
03. மண் , கனியுப்புக்கள் கழு விச் செல்லப்படுதல்
04. மண் pH குறைதல்
05. மண் நுண்ணங்கிகளின் எண்ணிக்கை குறைதல்
06. $Al^{3+}$ கரைதகவு கூடி நச்சுத் தன்மை ஏற்படுதல்
07. வேர்களினால் கனியுப்புக்கள் அகத்துறிஞ்சப்படும் திறன் குறைதல்
08. மண்ணில் இருந்து கல்சியம் அயன் ($Ca^{++}$) , மக்னீசியம் அயன் ( $Mg^{2+}$) என்பன இழக்கப்படுதல்

அமிலமழை பெய்யும் நாடுகளில் கந்தக ஒட்சைட்டுக்களையும் நைதரசன் ஒட்சைட்டுக்களையும் வளிக்குள் செலுத்துவதைத் தடுக்க வேண்டும் என்ற இயக்கம் தோன்றியுள்ளது. சிலநாடுகள் இக்கட்டுப்பாட் டுக்குத் தேவையான சட்டங்களையும் இயற்றுகின்றன. ஆனால் இவ்வாயுக் களைச் சுத்திகரிப்பதற்கு அதிக செலவுமிக்க தொழில் நுட்பங்களைக் கையாள வேண்டும். இத்தகைய செலவுமிக்க தொழில்நுட்பங்களை வள ரும் நாடுகள் ஏற்றுக் கொள்வது கஷ்டம். முதலாவது அவற்றுக்கு நிதி வசதி யில்லை. அடுத்து வளர்முக நாடுகளுக்குக் கிடைக்கும் தொழிற்சாலை இயந்திரங்கள் மாசு வாயுக்களை அகற்றுதவற்கான தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு உற்பத்தியானவை. அத்துடன் அமில மழை வளரும் நாடுகளுக்கு இதுவரை பிரச்சினையாக வளரவில்லை.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு பச்சோந்தி



விலங்குகளின் சாம்ராஜ்யத்திலுள்ள விநோதங்கள் எண்ணற்றவை. ஊர்வனவற்றில் கமலியோன் குடும்பத்தினைச் சார்ந்த பச்சோந்தியானது பல அதிசயமான குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. தன்னுடல் வண்ணத்தைப் புறச் சூழ்நிலைக்கேற்ப அடிக்கடி மாற்றிக் கொள்கின்றது. இதன் தோலின் மேலடுக்கிற்குக் கீழேயுள்ள பகுதியில் வண்ணத் துகள்களைக் கொண்டுள்ள கலங்கள் செறிந்துள்ளன. ஒவ்வொரு கலத்திலும் அநேக வண்ண நுண்துகள்கள் உள்ளன. வண்ணத் துகள்கள் உள்ள கலங்கள் நட்சத்திர அமைப்பைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு கலமும் ஒரு குறிப்பிட்ட வண்ணத்தை வெளிப்படுத்துகின்றது. சூரியஒளியில் கருப்பையும் பகலில் இலைகளுக்கிடையில் அடர்ந்த பச்சையையும் இரவில் வெளுத்த மஞ்சளையும், கார்மேகமுள்ள பொழுது மெல்லிய பச்சையையும், மழை பொழியும்போது கறுப்பையும் தோற்றுவிக்கின்றது. வண்ணத் துகள்கள் உள்ள கலங்கள் சுருங்கி விரிவடைவதால் அதற்கேற்ப பச்சோந்தியின் வண்ணமும் மாற்றம் அடைகின்றது.

பச்சோந்தியின் கண்கள் கூர்மையான பார்வையைக் கொண்டவை. ஒவ்வொரு கண்ணும் தனித்து 180⁰ வரை எல்லாத் திசைகளுக்கும் திரும்பிப் பார்க்கும் தன்மை வாய்ந்தது. மேலும் இரண்டு கண்களாலும் இரண்டு காட்சிகளைப் பார்க்கக்கூடிய திறமை வாய்ந்தது. ஒவ்வொரு கண்ணிலுமுள்ள மேல்கீழ் இமைகள் ஒன்றாக இணைந்து கண்மணி போன்ற ஒரு வட்டமான துளையை ஏற்படுத்துகின்றன. இரண்டு கண்மூடித் துளைகளும் தலைக்கு மேற்புறத்தில் முன்புறமாக ஒன்றுக்கொன்று அருகில் சேர்ந்து இருகண்காட்சிப் பார்வையை (Binocular Vision) ஏற்படுத்துகின்றன.

அமெரிக்காவின் போர்ரொன் (Porton) காட்டில் கண்ணிலிருந்து இரத்தத்தை பீய்ச்சி இரைகளை வேட்டையாடும் பச்சோந்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹாவார்ட் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜோன் மிலேன்டர் ஆய்வு செய்ததில் 6 அடி தூரத்திற்கு இவை இரத்தத்தைப் பாய்ச்சுகின்றன. அவ்வேளையில் உடம்பிலுள்ள ஐந்திலொரு பங்கு இரத்தம் வெளியே செல்கின்றது. எனினும் பச்சோந்திக்கு எந்தக் குறைபாடும் நேர்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்கேட்ஸ்



"பால் ஆலன்" என்ற தனது நண்பனின் வீட்டிற்குச் சென்ற அந்தச் சிறுவன் அந்தப் பொரு ளையே வைத்த கண் வாங்காது பார்க்கிறான். அது ..... ! புராதன முறையில் இயங்கும் கணினி. அன்று முதல் தன் நண்பனின் வீட்டுக்கு அடிக்கடி சென்று கணினியுடனும் , நண்பனுடனும் நட்பை வலுப்படுத்திக் கொள்கிறான். வளர்ந்து பெரியவன் ஆனதும் நண்பனுடன் இணைந்து மென்மொழிகள் எழுதும் நிறுவனத்தைத் தொடங்குகிறான். இன்று உலகின் முதலாவது கோடீஸ்வரனாகத் திகமும் "பில்கேட்ஸ்" தான் அச்சிறுவன்.


1975 இல் பில்கேட்ஸ் ஆரம்பித்த நிறுவனம் ALTER 8800 என்ற கணினி மென்மொழியை எழுதித் தன் பயணத்தைத் தொடங்கியது. ஏற் கனவே இருந்த மென்மொழிகளை ஆராய்ந்து அதிலுள்ள குறைகளை நீக்கி செம்மைப்படுத்தி BASIC என்ற புதிய மென்மொழியை எழுதினார். இது மிக எளிமையாகவும் , வசதியாகவும் இருப்பதாகக் கூறி உலகமே " பில் கேட்சை"ப் பாராட்டியது.

அப்பிள் என்ற கணினி நிறுவனம் "மௌஸ்" மூலம் இயங்கும் ஒரு சுலபமான முறையை அறிமுகப்படுத்தி உலகைத் தம்பக்கம் ஈர்த்தபோது தான் பில்கேட்ஸ் அவர்களின் மைக்ரோ சொவ்ற் நிறுவனம் வின்டோஸ் என்ற ஒப்பரேற்றிங் சிஸ்ரத்தை அறிமுகப்படுத்தியது. மேலும் " வின்டோஸ் வாங்கு வோருக்கு இன்ரநெற் எக்ஸ்புளோறர் இலவசம் " என்றும் விளம்பரப்படுத்த இந்த உத்தியால் உலகமே கவரப்பட்டது. பில்கேட்ஸ் உலகின் முதலாவது கோடீஸ்வரன் ஆனார்.

*******************************************


## நன்றி





"அதாவது" சஞ்சிகைக்கான

விளம்பரங்களைப் பெற்றுத்

தருவதில் தொடர்ந்து

ஊக்கமுடன் செயற்படும்,

செல்வன் செ.ஜெயந்தன் செல்வன் கி.தயாளன்

ஆகிய இருவருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை

வீ. செந்தூரன்

## தோற்றம் :

* ஐக்கிய நாடுகள் என்பது உலக சமாதானம், பொருளாதார, சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்காக உழைக்கும் பொருட்டு சுய விருப் பின் பேரில் ஒருங்கிணைந்த சுதந்திர நாடுகளின் தனித்துவமான அமைப்பாகும்.
* ஐக்கிய நாடுகள் சாசனம் 1945 ஜூன் 26 சன்பிரான்சிஸ்கோ மகாநாட்டில் 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டபோது "போலாந்து" தனது உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லையாயினும் பிறிதொரு தினத்தில் கைச்சாத்திட்டு ஐக்கிய நாடுகளின் 51வது ஆரம்பகால அங்கத்துவ நாடாகியது.
* இந்த அமைப்பு 1945 ஒக்டோபர் 24ம் திகதி 50 அங்கத்துவ நாடுகளுடன் உதயமாகியது.

## ஐக்கிய நாடுகள் சாசனம் :-

அங்கத்துவ நாடுகளின் உரிமைகள் கடமைகள் பற்றியும் பொது இலட்சியங்களைச் செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளினைப் பற்றித் தெரிவிக்கும் வழிகாட்டி. இதை எல்லா அங்கத்துவநாடுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சாசனமானது 19 அத்தியாயங்களைக் கொண்டுள்ளதுடன் 111 சரத்துக்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இச் சாசனமானது 4 நோக்கங்களையும் 7 கொள்கைகளையும் பட்டியற்படுத்துகின்றது.

## நோக்கங்கள் :

1. பாதுகாப்பு, மற்றும் உலக சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்தல்
2. மனிதஉரிமைகளையும் சுயகௌரவத்தையும் அடிப்படையாகக்கொண்டு நாடுகளுக்கிடையே நட்புறவை விருத்தி செய்தல்
3. நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதில் நாடுகள் யாவும் பூரண ஒத்துழைப்பு வழங்கல்
4. நாடுகள் யாவும் முகவர் போலத் தொழிற்படுதல்

அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கைகள் :

1. உறுப்புரிமை நாடுகள் எல்லாம் சமத்துவ உரிமையைக் கொண்டிருக்க வேண்டும்.
2. அங்கத்தவர்கள் அரசியல் திட்ட வரைபிற்கு இணங்க அவர்களுடைய கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.
3. அமைதியானதும் சமாதானமானதுமான முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க உடன்பட வேண்டும்.
4. தற்பாதுகாப்புத் தவிர ஏனைய நாடுகளுக்கு எதிராக அச்சுறுத்தல் , பய முறுத்தல் மற்றும் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கக் கூடாது.
5. ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் உள்ள நோக்கங்களை நிறைவேற்ற பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
6. உறுப்புரிமை நாடுகளைப் போலவே உறுப்புரிமை அற்ற நாடுகளும் உலக சமாதானம் , பாதுகாப்பு என்பவற்றைப் பேண வேண்டும்.
7. அங்கத்துவநாடு அதனுடைய சொந்த எல்லைப்பகுதிச் செயற்பாடுகளில் தலையிடமாட்டாது என்பதையும் ஐக்கிய நாடுகள் ஏற்க வேண்டும்.

மேற்கூறிய நோக்கங்களையும் கொள்கைகளையும் மீறும் எந்தவொரு உறுப்புரிமை நாடும் நிறுத்தி வைக்கப்படும் அல்லது ஐக்கிய நாடுகளில் இருந்து வெளியேற்றப்படும்.

## பின்னணி :

1. இரண்டாவது உலகப்போர் (1939 - 1945) நடைபெற்றபோது பல இலட்சக் கணக்கான மக்கள் உயிரிழந்து , இடம்பெயர்ந்து , பல கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்ட பின்னரே யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தகைய போர் இனிமேலும் ஏற்படாமல் தடுக்க ஓர் அமைப்பின் மூலம் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்பதைப் பல நாடுகள் உணர்ந்து கொண்டன.
2. 1943 ஒக்டோபர் மாதம் மொஸ்கோவில் கூடிய ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனா என்பவற்றின் பிரதிநிதிகள் 2ம் உலகப்போர் முடிவடைந்ததும் உலக அமைதியைப் பேண சர்வதேசஅமைப்பு ஒன்றை ஏற்படுத்த உடன்பட்டமை. இது “மொஸ்கோ பிரகடனம்” எனப்படும்.
3. 1944ல் வோசிங்டனில் நடைபெற்ற மகாநாட்டில் சர்வதேச அமைப்பு ஒன்றுக்குத் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இம்மகாநாடு “டம்பார்டன் ஒக்ஸ்” மகாநாடு எனப்படும்.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 1945 பெப்ரவரி மாதம் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ற் , பிரித்தானிய பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில் சோவியத் ரஷ்யாவின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோரின் ஆலோசனையில் 1945 ஏப்ரல் மாதம் 25ந்திகதி ஜூன் மாதம் 26ம் திகதிகளில் சன்பிரான் சிஸ்கோவில் கூடிய 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஐ.நா.சாசனத்தையும் சர்வதேச நீதிமன்றின் சட்டங்களையும் தயாரித்து அவற்றை ஏகமன தாக அங்கீகரித்தன.

5. 1945 ஒக்டோபர் 24ம் திகதி பாதுகாப்புச்சபையின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகள் உட்பட ஏனைய ஆரம்பகால நாடுகளும் கைச்சாத்திட்டு ஐக்கிய நாடுகள் உதயமானது.

## ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தினம்

1945 ஒக்டோபர் 24ம் திகதி பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகள் உட்பட ஏனைய ஆரம்பகால நாடுகளும் கைச்சாத்திட்டு ஐக்கியநாடுகள் சபை உதயமானது. இத்தினமே ஐக்கிய நாடுகள் தினமாக உலகெங்கிலும் கொண்டாடப்படுகின்றது.

## ஐக்கிய நாடுகள் அமையத்தின் தோற்றத்திற்கான பின்னணிகள்

* 1ம் , 2ம் உலக மகாயுத்தங்கள் போன்ற கொடிய யுத்தங்கள் ஏற்பட்டமை
* ஏராளமான உயிர்கள் கொல்லப்பட்டமை
* நாடுகளின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டமை
* மீண்டும் பெற முடியாத ஏராளமான வளங்கள் போருக்காக அழிந்தமை

## ஐ.நாவின் அங்கத்துவம்

* ஐ.நா.வின் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு அதன் செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்து, உலக சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் எந்த ஒரு நாடும் அங்கத்துவம் பெற உரிமையுண்டு.
* இத்தகைய நாடுகள் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் சிபார்சுக்கிணங்க பொதுச்சபையில் அங்கத்துவத்தைப் பெறலாம்.

## இலங்கையின் அங்கத்துவம்

* இலங்கை 1955 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம்திகதி ஐக்கிய நாடுகளில் பிரதி நிதித்துவத்தைப் பெற்றது.
* இலங்கையின் முதலாவது நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் மாண்புமிகு செனரத் குணவர்த்தன ஆவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நாவின் உத்தியோக மொழி

❋ ஆங்கிலம்
❋ அரபு
❋ ரஷ்ய மொழி
❋ பிரான்சு (FRENCH)
❋ சீனம்
❋ ஸ்பானிய (SPANISH)

## ஐ.நாவின் தலைமையகம்

❋ ஐ.நா.தலைமைக் காரியாலயம் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நியூ யோர்க் நகரில் உள்ள கிழக்குப்புற ஆற்றின் ( East River) அருகே பல கட்டிடங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

❋ ஐ.நா.தனக்கென ஒரு கொடியையும் பாதுகாப்புப் படையையும் வைத் திருப்பதோடு தபால் முத்திரைகளையும் வெளியிடுகின்றது.

❋ ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அங்கத்துவ நாடுகளின் படைவீரர்கள் இடம்பெறுகின்றனர்.

❋ தலைமைக் காரியாலயத்தின் முன்னால் உறுப்புரிமை நாடுகளின் கொடி கள் பறக்கிறது.

## ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை

| ஆண்டு | அங்கத்துவ நாடுகளின் தொகை |
|---|---|
| 1945 | 51 |
| 1955 | 76 |
| 1974 | 138 |
| 1995 | 185 |
| 1999 | 189 |
| 2001 | 191 |

## ஐ.நா.உறுப்பு நாடுகள்

1945 அர்ஜன்ரினா, பெலாரஸ் , பிறேசில் , சிலி , சீனா , கியூபா , டென் மார்க் , டொமினிக்கன் குடியரசு , எகிப்து , எல்சால்வடார் , பிரான்ஸ் , ஹைதி , இரான் , லெபனான் , லக்ஸம்பர்க் , நியூ சிலாந்து , நிகராகுவா , பராகுவே , பிலிப்பைன்ஸ் , போலந்து , ருஷ்யா , சவூதிஅரேபியா , சிரியா , துருக்கி , உக்ரைன் , பிரிட்டன், அமெரிக்கா , யூகோஸ்சிலாவியா , கிரீஸ் , இந்தியா , பெரு , ஆஸ் திரேலியா , கோஸ்டாரீகா , லைபீரியா , கொலம்பியா , மெக்சிகோ, தென்ஆபிரிக்கா , கனடா , எதியோப்பியா , பனாமா , பொலிவியா, வெனிசுலா, கௌதமாலா, நோர்வே, நெதர்லாந்து, ஹோண்டுராஸ், உருகுவே , ஈக்வாடர் , ஈராக் , பெல்ஜியம்



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1946 | ஆப்கானிஸ்தான் , ஐஸ்லாந்து , சுவீடன் , தாய்லாந்து |
| 1947 | பாகிஸ்தான் , ஜேர்மன் |
| 1948 | பர்மா (மியான்மார்) |
| 1949 | இஸ்ரேல் |
| 1950 | இந்தோனேசியா |
| 1955 | அல்பேனியா , ஆஸ்திரியா , பல்கேரியா , கம்போடியா, பின்லாந்து, ஹங்கேரி , அயர்லாந்து , இத்தாலி , யோர்டான் , லாவோஸ் , லிபியா , நேபாளம் , போர்த்துக்கல் , ருமேனியா , ஸ்பெயின் , இலங்கை |
| 1956 | மொராக்கோ , சூடான் , துனிஷ்ஷியா , யப்பான் |
| 1957 | கானா , மலேசியா |
| 1958 | கினியா |
| 1960 | பெனின் , அப்பர் வோல்டா ( புறுகினா ஃபாஷோ) , காமரூன் , மத்திய ஆபிரிக்கக் குடியரசு , சாட் , காங்கோ , காங்கோ (முன்னாள் சாஜிர ) ஐவரி கோஸ்ட் , சைபிரஸ் , காபோல் , மடகாஸ்கர், நைஜர், சோமாலியா , டோகோ , மாலி , செனகல் , நைஜீரியா |
| 1961 | சியர்ராலியோன் , மாரிடானியா , மங்கோலியா , தான்சானியா |
| 1962 | புருண்டி , யமைக்கா , ருவாண்டா , டிரினிடாட் & டொபாகோ, அல்ஜீரியா , உகாண்டா |
| 1963 | குவைத் , கென்ஜா |
| 1964 | மலாவி, மால்டா , சாம்பியா |
| 1965 | காம்பியா , மாலதீவு , சிங்கப்பூர் |
| 1966 | கஜானா , போட்ஸ்வானா , லெசோதோ , பார்படோஸ் |
| 1968 | மொரீசியஸ், சுவாசிலாந்து , ஈக்வடோரியல் கினியா |
| 1970 | ஃபிஜி |
| 1971 | பஹ்ரைன், பூடான் , கத்தார் , ஓமான் , ஐக்கிய அரபுக் குடியரசுகள் |
| 1973 | பஹாமாஸ் , ஜேர்மனி |
| 1974 | பங்களாதேசம் , கிரெனடா , கினியா - பிஸ்ஸௌ |
| 1975 | கேப்வெர்ட் , மொசாம்பிக் , சாவோடோம் & பிறின்சிப் , பாப்வா நியூகினியா , காமரோஸ் , சுரினாம் |
| 1976 | சேசெல்ஸ் , அங்கோலா , சாமோவா |

அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1977 | ஜிபூடி , வியட்னாம் |
| 1978 | சாலமன் தீவுகள் , டொமினிகா |
| 1979 | செயின்லூசியா |
| 1980 | சிம்பாவே , செயின்ட் வின்சென்ட் |
| 1981 | வனாட்டு , பெலிஸ் , ஆன்ரிகுவா மற்றும் பார்புடா |
| 1983 | செயிட் ஹிட்ஸ் & நெவிஸ் |
| 1984 | புருனே |
| 1990 | நபீமியா , லிச்டென்டெயின் |
| 1991 | எஸ்தோனியா , வடகொரியா , தென்கொரியா , லாட்வியா , லிதுவேனியா , மார்ஷல் தீவுகள் , மைக்ரோனேசியா |
| 1992 | அர்மீனியா , கஸாக்ஸ்தான் , கிர்கிஸ்தான் , மால்டோவா , சான் மரினோ , தாஜிஹிஸ்தான், துர்க்மினிஸ்தான் , உஸ்பெஹிஸ்தான், அஸர்பெய்ஜான் , போஸ்னியா , ஹெர்சேகோவினா , குரோசியா , ஸ்லோவேனியா , ஜார்ஜியா |
| 1993 | செக்குடியரசு , ஸ்லோவாகியா , மாசிடோனியா , எரித்ரியா , மொனாக்கோ , அன்டோரா |
| 1994 | பலாவ் |
| 1999 | கிரிபாடி , நௌரு , டோங்கா |
| 2000 | தூவலு |
| 2002 | சுவிற்சர்லாந்து , கிழக்கு டிமர் ( செப்ரெம்பர்) |

## குறிப்புக்கள் :

1. செக்கோசிலேவியா 1945 முதலே உறுப்பினர் செக் குடியரசும், ஸ்லோவக் குடியரசும் 1993 ல் தனித்தனி உறுப்பினர்கள் ஆயின.
2. கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகள் 1973 ல் தனித்தனி உறுப்பினர் களாக இருந்தன. 1990 இல் இரண்டும் ஒன்றிணைந்தன.
3. 1945 முதல் உறுப்பினராக இருந்த சோவியத்யூனியனின் உறுப்பினர் பதவி 1991 இல் ருஷ்யாவிற்கு வழங்கப்பட்டது.
4. மாசிடோனியா ஐ. நா. வில் " முன்னாள் யூக்கோஸ்லேவிய மாசிடோனியக் குடியரசு " எனப்படுகின்றது.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 1961இல் இருந்து உறுப்பினராக இருந்த டங்கனிகா , 1963 முதல் உறுப்பினராக இருந்த சான்ஷியாருடன் 1964 இல் இணைந்தது. புதிய நாட்டின் பெயர் தான்சானியா.

6. 1947 இல் இருந்து உறுப்பினராக இருந்த வடஜேர்மன் 1967 இல் இருந்து உறுப்பினராக இருக்கும் தென்ஜேர்மனுடன் 1990 இல் ஒன்றிணைந்தது.

7. ஐ.நா.வில் 191 ஆவது உறுப்பினராக கிழக்கு டிமர் செப்ரெம்பர் 27.2002 இல் இணைந்தது.

## ஐ.நா.வின் அமைப்பு

❊ ஐக்கிய நாடுகள் பிரதான ஆறு உறுப்புக்களைக் கொண்டுள்ளது. (ஆறு சபைகள்) அவை :

| | |
|---|---|
| 1. பொதுச் சபை | 2. பாதுகாப்புச் சபை |
| 3. பொருளாதார சமூக சபை | 4. சர்வதேச நீதிமன்றம் |
| 5. நம்பிக்கைப் பொறுப்புச் சபை | 6. செயலகம் |

## பொதுச்சபை (GENERAL ASEMBLY)

❊ ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகள் யாவும் பிரதிநிதித்துவம் வகிக்கும் சபையே இதுவாகும்.

❊ அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான பிரதான கருத்துப் பரிமாற்றம் இச்சபையிலே நடைபெறும்.

❊ ஒரு அங்கத்துவ நாட்டுக்கு ஒரு வாக்குரிமை மட்டுமே உண்டு.

❊ உலகஅமைதி, பாதுகாப்பு, புதிய அங்கத்துவ நாடுகளை அனுமதித்தல் , வரவு செலவுத் திட்டம் ஆகிய முக்கிய விடயங்களைத் தீர்மானிக்க 2/3 பெரும்பான்மை வாக்குகள் அவசியம். ஏனைய விடயங்களுக்கு சாதாரண பெரும்பான்மை போதுமானது.

❊ பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டமானது பிரதி வருடமும் செப்டெம்பர் மாதம் 3ம் வியாழக் கிழமையில் ஆரம்பித்து டிசம்பர் மாதம் நடுப்பகுதி வரை சுமார் 3மாத காலம் நடைபெறும்.

❊ பொதுச்சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்பவே நடப்புவருட ஐ.நா.வின் செயற்பாடுகள் அமையும்.

❊ விசேட கூட்டங்கள் வருடத்தில் ஏனைய காலங்களில் கூட்டப்பட அவசரக் கூட்டங்கள் எக்காலத்திலும் கூட்டப்படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகளும் அதிகாரங்களும்

1. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பின் மூலம் ஆயுதங்களைக் களைதல், ஆயுதக் கட்டுப்படுத்தல், படைகுறைப்பு, பொருளாதாரத் தடைகள் மூலம் சர்வதேச அமைதி, பாதுகாப்புக்களை ஏற்படுத்த விதப்புரைகளை வழங்குதலும் ஆலோசித்தலும்.

2. பாதுகாப்புச் சபையிடமிருந்தும் ஏனைய ஐ. நா. வின் அமைப்புக்களில் இருந்தும் அறிக்கைகளைப் பெற்று அவற்றினை ஆலோசித்து அனுமதி வழங்குதல் .

3. ஐக்கியநாடுகளின் வரவுசெலவுத்திட்டத்தை அங்கீகரித்தலும் அதனைச் செலுத்துவதற்கு அங்கத்துவ நாடுகளிடையே பகிர்ந் தளித்தலும்.

4. பாதுகாப்புச் சபையின் சிபார்சுப்படி செயலாளர் நாயகத்தைத் தெரிந் தெடுத்தல்.

5. பொருளாதார , சமூக, கலாசார, கல்வி , சுகாதாரத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்துதலும் அது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளலும்.

6. பாதுகாப்புச் சபைக்குத் தேவையான நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் பிற பிரதான சபைகளுக்குத் தேவையான உறுப்பினர்களையும் தெரிவு செய்தல். இவற்றுள்
   - A - பாதுகாப்புச் சபைக்கான நிரந்தரமற்ற 10 உறுப்பினர்கள் தெரிவு
   - B - பொருளாதார சமூக சபை உறுப்பினர்கள் தெரிவு
   - C - நம்பிக்கை பொறுப்புச் சபை தெரிவு
   - D - சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவு

   என்பன முக்கியமானவை.

## பாதுகாப்புச் சபை (SECURITY COUNCIL)

❋ உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தி நாடுகளின் ஆக்கிரமிப்புக்களைத் தவிர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே இச் சபையாகும்.

❋ இவ்வமைப்பில் எல்லாமாக 15நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன.

❋ இதில் நிரந்தர அங்கத்துவ நாடுகள் ஐந்து ஆகும். அவை :

1. ஐக்கிய அமெரிக்கா
2. பிரித்தானியா
3. பிரான்ஸ்
4. சீனா
5. ரஷ்யா



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✽ மீதி 10 நாடுகள் பொதுச்சபையின் அங்கத்துவ நாடுகளில் இருந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளின் சிபார்சின்படி 2 வருட பதவிக் காலத்துக்குத் தெரிவு செய்யப்படும்.

✽ பாதுகாப்புச் சபையில் முக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற எல்லா நிரந்தர நாடுகளுட்பட குறைந்தபட்சம் 9நாடுகளின் அங்கீகாரம் தேவையானதாகும்.

✽ பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் நிரந்தர அங்கத்துவ நாடுகள் விரும்பாதபோது அதனை நிராகரிக்கும் "வீட்டோ" அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

## வீட்டோ அதிகாரம் (VETO POWER)

✽ பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரமே வீட்டோ அதிகாரமாகும்.

✽ ஐக்கிய நாடுகள் முதன் முதலில் 1970ம் ஆண்டு மார்ச் மாதம் " வீற்றோ" அதிகாரத்தைப் பயன்படுத்தியது. தற்போது சிம்பாவே என்றழைக்கப் படும் (முன்புRhodesia) நாட்டுடன் ஐ.நா.சபை உறுப்பினர்கள் தொடர்புகளைத் துண்டிக்க வேண்டும் என்ற பாதுகாப்புச் சபையின் வேண்டுதலை ஐக்கிய நாடுகள் வீற்றோ அதிகாரம் மூலம் நிராகரித்தது.

✽ பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் தாம் விரும்பாதபோது நிரந்தர அங்கத்துவநாடுகள் அதனை நிராகரிப்பதற்கு இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தும்.

உ+ம் : செயலாளர் நாயகம் பூர்த்திரோஸ் பூத்திரோஸ்கலி இரண்டாவது முறையாகவும் செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்துவ நாடுகள் விரும்பிய போதிலும் ஐக்கிய அமெரிக்கா வீட்டோ செய்து அதனை நிறுத்தியமையும் திரு கோபி அனான் என்பவரை அப்பதவிக்குப் பிரேரித்தமையும்.

## செயற்பாடும் அதிகாரங்களும்

1. ஐ.நா. கொள்கைகளும் நோக்கத்திற்கும் ஏற்ப சர்வதேச பாதுகாப்பையும் சமாதானத்தையும் பேணுவதாகும்.

2. சர்வதேச பிரச்சினைகளுக்கான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் காரண காரியங்களைப் பகுத்து ஆராய்தல் .

3. அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி வகைகளைச் சிபார்சு செய்தல்.

அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.

5. ஆயுதக்களைவு, ஆயுதங்களை நிர்வாகித்தல் தொடர்பான ஒழுங்கு முறையினைத் திட்டமிடல்.

6. உலக சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படும்போதும் நாடுகளிடையே முரண்பாடுகள் தோன்றும்போதும் சம்பந்தப்பட்ட நாடுகளிடையே சமரசப் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்தவும் நடு நிலைமை வகிக்கவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.

7. ஐ.நா.வின் நிபந்தனைகளை மீறி உலக சமாதானத்துக்கு அச்சுறுத்த லாக நடந்து கொள்ளும் நாடுகளுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை களை விதித்தல்.

8. பொருளாதாரத் தடை தோல்வியடையும் பட்சத்தில் குறிப்பிட்ட நாட்டு க்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்தல்.

9. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவிக்கான பிரதிநிதியை மாதாந்த நியமன முறையில் அங்கத்துவ நாடுகளின் ஆங்கில எழுத்து வரிசை முறையில் தெரிவு செய்தல்.

10. புதிய அங்கத்துவ நாடுகளை அனுமதிப்பதற்கான விதப்புரைகளைப் பொதுச் சபைக்கு வழங்குதல்.

## பொருளாதார சமூகசபை (ECONOMIC AND SOCIAL COUNCIL)

* ஐ.நா.வின் பிரதானஉறுப்பு அமைப்புக்களுள் இதுவும் ஒன்றாகும்.
* இச்சபையில் 54 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெறுகின்றனர்.
* இத்தொகையில் 1/3 பகுதியினர் (18நாடுகள்) ஒவ்வொரு ஆண்டும் பதவி விலக அதே அளவு தொகையினர் பொதுச்சபையினால் நியமனம் பெறுவர்.
* ஒவ்வொரு அங்கத்துவ நாடும் 3ஆண்டுகள் பதவி வகிக்கலாம்.
* ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு.
* இச்சபை "இக்கோசொக் " (ECOSOC) என சுருக்கமாக அழைக்கப்படும்.
* பொருளாதார சமூக சபையானது பிரதி வருடமும் ஒவ்வொன்றும் ஒரு மாத காலம் நீளமான இரண்டு பொதுக் கூட்டங்களை நடாத்தும்.
* இதில் ஒரு கூட்டம் நியூயோர்க் நகரிலும் மற்றது ஜெனிவா நகரிலும் நடாத்தப்படும்.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகளும் அதிகாரங்களும்

1. சர்வதேச ஒத்துழைப்புடன் மிக முக்கியமான பொருளாதார சமூக விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்.
2. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முக்கிய செயற்பாடுகளில் ஈடுபடல்.
3. அதன் அதிகாரத்துக்குட்பட்ட விடயங்களில் சர்வதேச மகாநாடுகளைக் கூட்டிப் பொதுச்சபைக்கு சமர்ப்பிப்பதற்காக அறிக்கை தயாரித்தல்.
4. விசேட தாபனங்களுடன் உரையாடி ஒப்பந்தங்களை மேற்கொள்வதும் அவற்றுக்கும் ஐ.நா.வுக்கும் இடையிலுள்ள தொடர்புகளை நிர்ணயித்தலும்.
5. சபை மேற்கொள்ளும் விடயங்கள் பற்றி அரசு சார்பற்ற நிறுவனங்களோடு ஆலோசனை செய்தல்.

"இக்கோ சொக்கின்" பணிகள் தனியொரு அமைப்பினால் மட்டும் கவனிக்க முடியாத அளவுக்குப் பரந்துபட்டமை ஆதலால் பல துணை அமைப்புக்களையும் கொண்டு செற்படுகின்றது.

அவை வருமாறு.

✽ மனித உரிமைகள் ஆணைக்குழு
✽ சமூக அபிவிருத்தி ஆணைக்குழு
✽ போதைப் பொருள் ஆணைக்குழு
✽ உலக சுகாதார ஸ்தாபனம்
✽ சர்வதேச நாணய நிதியம்
✽ உலக வங்கி.

## நம்பிக்கைப் பொறுப்புச் சபை
## (TRUSTEESHIP COUNCIL)

✽ ஐ.நா.ஆரம்பிக்கப்பட்டபோது உலகின் சில பகுதிகளில் மக்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

✽ ஐ.நா.ஆரம்பிக்கப்பட்டதும் இப்பிரதேசங்கள் யாவும் ஐ.நா.வின் விசேட பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு நம்பிக்கைப் பொறுப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

✽ இவ்வாறான 11 பிரதேசங்கள் இருந்தன. இவை ஆபிரிக்காவிலும் பசுபிக் பிராந்தியத்திலும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✽ நம்பிக்கைப் பொறுப்புச் சபையில் பாதுகாப்புச்சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளே அங்கம் வகிக்கின்றன.

✽ 1994ம்ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தின் கீழிருந்த பாலுத்தீவு சுதந்திரம் பெற்று ஐ. நா. வின் 185 வது நாடாக மாறியது.

## செயற்பாடுகளும் அதிகாரங்களும்

1. பொறுப்பாக்கப்பட்ட பிரதேச மக்களின் அரசியல் பொருளாதார , சமூக கல்வித் துறைகளில் விருத்தியை ஏற்படுத்தல்.
2. பொறுப்பாக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.
3. பிரதேசங்களைப் பொறுப்பேற்ற நாடுகளுடன் ஆலோசனை செய்தல்.
4. பொறுப்பேற்கப்பட்ட பிரதேசங்களுக்கு விசேடகுழுக்கள் செல்லல்.

ஆரம்பத்தில் இருந்த 11 நம்பிக்கைக்குப் பொறுப்பான நாடுகளும் 1994ற்குப் பின்பு சுதந்திரமானதாக அல்லது ஏனைய நாடுகளின் ஓர் அங்கமாக மாறிவிட்டன.

| பெயர் | நம்பிக்கைக்குப் பொறுப்பு | நிலைமை |
|---|---|---|
| 1. கமரூன் | ஐக்கியராச்சியம் | நைஜீரியா கமரூன் போன்ற நாடுகளின் பகுதி - 1961 |
| 2. கமரூன் | பிரான்ஸ் | சுதந்திரமானது -1960 |
| 3. நௌறு | அவுஸ்திரேலியா | சுதந்திரமானது - 1968 |
| 4. நியூகினியா | அவுஸ்திரேலியா | Papua வின் பகுதி - 1975 |
| 5. பசுபிக் தீவுகள் | ஐக்கியஅமெரிக்கா | சுதந்திரமானது - 1994 |
| 6. ருவாண்டா | பெல்ஜியம் | சுதந்திரமானது - 1962 |
| 7. சோமாலியா | இத்தாலி | சுதந்திரமானது - 1960 |
| 8. ரன்கனிக்கா | ஐக்கியராச்சியம் | சுதந்திரமானது - 1961 |
| 9. ரோகோலான்ட் | பிரான்ஸ் | சுதந்திரமானது - 1960 |
| 10. ரோகோலான்ட் | ஐக்கியராச்சியம் | கானாவின் பகுதி 1957 |
| 11. மேற்கு சுமோ | நியூசிலாந்து | சுதந்திரமானது - 1962 |



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நீதிமன்றம் (INTERNATIONAL COURT OF JUSTICE)

- ❋ ஐ.நா.இணை நிறுவனங்களுள் சர்வதேச நீதியை நிலை நாட்டவும் சர்வதேச ரீதியாக நாடுகளின் முறைப்பாடுகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டதே இவ்வமைப்பு ஆகும்.
- ❋ சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்து நாட்டின் "ஹேக்" நகரில் (The Hague in Netharlards) அமைக்கப்பட்டுள்ளது. மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஒரு தலைவரும் உபதலைவரும் தெரிவு செய்யப்படுவர்.
- ❋ தற்போதைய தலைவர் - குல்பெர்ட்குய்லாமே (பிரான்ஸ்)
  பதிவாளர் - பிலிப்பேகௌரெவர் (பெல்ஜியம்)
- ❋ அங்கத்துவ நாடுகளில் சர்வதேச பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள இந்நீதிமன்றில் தமது முறைப்பாடுகளை சமர்ப்பிப்பர்.
- ❋ எந்தவொரு நாடும் அதனுடைய பிணக்குகளை சர்வதேச நீதிமன்றத் தின் முன் கொண்டுவர நிர்ப்பந்திக்கப்படமாட்டாது. சுயவிருப்பின் அடிப் படையில் வழக்குகளைக் கொண்டு செல்லலாம்.
- ❋ குறித்த விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப் பிக்குமாறு பாதுகாப்புச் சபையை இந்நீதிமன்று பணிக்கலாம்.
- ❋ நாடுகள் மட்டுமே இதில் வழக்குத் தொடரலாம். எனினும் தனிப்பட்டவர் ஓர் வழக்கினைக் கொண்டுவர விரும்பினால் அந்த வழக்குத் தொடர் பாக அவர் வசிக்கும் நாட்டின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.
- ❋ 15 நீதிபதிகள் சர்வதேச நீதிமன்றில் நீதிபதிகளாகத் தெரிவு செய்யப்படு வர். ஒரு நாட்டிலிருந்து இரு நீதிபதிகள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.
- ❋ நீதிபதிகளின் பதவிக்காலம் 9ஆண்டுகளாகும். பதவிக்காலம் முடியும் போது இரண்டாவது முறையாகவும் தெரிவு செய்யப்படலாம்.
- ❋ பாதுகாப்புச் சபை மற்றும் பொதுச்சபை சுயமாக வாக்களித்து நீதிபதி களைத் தெரிவு செய்கின்றது.

### நீதி அதிகாரங்கள்

1. அங்கத்துவ நாடுகள் விவகாரம் தொடர்பாகப் பிரச்சினைகளை முன் வைக்கும்போது அதனை விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு.
2. முக்கிய விடயங்களில் பிரச்சினைகளுக்கு உள்ளான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளும் நீதிமன்றின் தீர்ப்பினை ஏற்றுக் கொள் வதாக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தும் அதி காரம் உண்டு.

அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நீதிமன்றினால் விசாரணை செய்யப்பட்ட சில வழக்குகள் :

1. ஐக்கிய அமெரிக்க விமானத்தைக் குண்டு வைத்துத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு லிபியர்கள்மீது ( லிபியா மீது) வழக்குத் தொடரப்பட்டமை .
2. இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் உலகப் போருக்குக் காரணமான ஜேர்மனி மீது நேட்டோ நாடுகள் வழக்குத் தொடர்ந்தமை .
3. டென்மார்க், நோர்வே, ஆகியநாடுகளுக்கு இடையேயுள்ள கண்ட மேடை , மீன்பிடி வலயம் ஆகியவற்றைப் பிரிக்கும் கடல் எல்லை தொடர் பாக தீர்ந்துள்ளது.

## செயலகம் (SECRETARIAT)

- நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.களின் தலைமையகத்திலும் வெளியிடங் களிலும் அமையத்தின் அன்றாட பணிகளை மேற்கொண்டு வருகின்ற தும் சர்வதேச அலுவல்களை மேற்கொள்வதுமான அமைப்பே செயலக மாகும்.
- ஐ.நா.வின் முக்கிய நிர்வாக நடவடிக்கைகள் இதன் மூலம் நடைபெறு கின்றது.
- செயலகத்தின் பிரதான நிர்வாக அதிகாரி "செயலாளர் நாயகம்" என அழைக்கப்படுவர்.
- இவர் சர்வதேச சிவில் சேவையாளர் அங்கம் வகிக்கும் ஆளணியின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் அமையத்தின் அன்றாட அலுவல்களைக் கவனிப்பார்.
- நியூயோர்க் தலைமையகத்தில் சுமார் 4800 பேர் பணியாற்றுகின்றனர்.
- செயலகம் சர்வதேசக் கூட்டு முயற்சியால் கட்டப்பட்டது. அமெரிக்கா வின் வொலஸ் ஹே.ஹறிசன் தலைமையிலான உலகப் புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டது.

## செயலாளர் நாயகம்

| | | |
|---|---|---|
| 1. தெரிவு | : | இவர் பாதுகாப்புச் சபையின் விதந்துரையின் படி பொதுச் சபையினரால் நியமிக்கப்படுவார். |
| 2. பதவிக்காலம் | : | 5 ஆண்டுகள் பதவி வகிப்பர். |



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அதிகாரம் : செயலகத்தின் முக்கிய நிர்வாகஅதிகாரி ஆவார். ஐ.நா.வின் சாசனங்களுக்கு அமைவாக அவற்றைச் செயற்படுத்தும் பிரதான நிர்வாக அதிகாரி யாவார்.

4. செயலாளர் நாயகத்தின் கடமைகள் :

❋ அதிக பொறுப்புள்ள அதிகாரியாகவும் நிர்வாகியாகவும், இராஜதந்திரியாகவும், ஆலோசகராகவும், செயற்பாட்டாளராகவும் விளங்குவார்.

❋ உலக அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அச்சுறுத்தல் வரும் போது அதனைப் பாதுகாப்புச் சபைக்குத் தெரியவைத்தல்.

❋ சர்வதேச சமூகத்தில் அங்கத்துவ நாடுகளுக்காக அரச மட்டத்தில் சேவையாளராகவும் செயற்படுவார்.

❋ ஐ.நா.சபையின் எல்லா ஆவணங்களையும் பேணுதல்.

## செயலாளர் நாயகங்கள் பற்றிய விபரங்கள்

இதுவரை இப்பதவியில் 7 பேர்கள் கடமையாற்றியுள்ளனர்

| செயலாளர் நாயகமாகப் பணியாற்றியோர் பெயர் | நாடுகள் | பதவிக் காலம் |
|---|---|---|
| 1. ட்ரிக்விலீ (படம் அ) (Trygve Lie) | நோர்வே | 1946 - 1953 |
| 2. டாக் ஹமர்ஷோல்ட் (படம் ஆ) (Dag Hammarskjold) | சுவீடன் | 1953 - 1961 |
| 3. ஊதாண்ட் (படம் இ) (U Thant ) | மியன்மார் | 1961 - 1971 |
| 4. குர்ட் வால்ட்ஹைம் (படம் ஈ) (Kurt wald heim) | ஆஸ்திரியா | 1972 - 1981 |
| 5. ஹவியர் பெரஸ்டிகுவெல்யா (படம் உ) (Javier Perez de Cuellar) | பேரூ | 1982 - 1991 |
| 6. பூத்ரொஸ் பூத்ரொஸ்காலி (படம் ஊ) (Boutros Boutros Ghali) | எகிப்து | 1992 - 1996 |
| 7. கோபி அனான் (படம் எ) (Gobi Annan) | கானா | 1997 லிருந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படம் அ


படம் ஆ


படம் இ


படம் ஈ


படம் உ


படம் ஊ


படம் எ

## ஐ.நா.வினதும் இதன் இணைத் தாபனங்கள் மூலமும் இலங்கை பெறும் உதவிகள்

1955 ல் அங்கத்துவ நாடாக இலங்கை சேர்ந்து கொண்டதிலிருந்து பெற்றுக் கொண்ட உதவிகளாவன :

1. சமூக பொருளாதார, கலாசார, கல்வி தொடர்பான துறைகளில் உதவிகள் பெற்று வருகின்றமை.
2. நிதி, பண்டங்கள் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றமை
3. மனிதவள அபிவிருத்தி ரீதியான ஆலோசனைகளைப் பெறுகின்றமை.
5. சப்ரகமுவா இணைந்த பல்கலைக் கழகத்தில் தகவல் தொடர்பு நிலையம் ஆரம்பிக்க உதவி பெறப்பட்டமை.
6. இலெக்ட்ரோனிக் தொடர்புசாதனத் துறைக்கு உதவிகள் பெறப்பட்டமை.

இலங்கையில் தமது காரியாலயங்களை அமைத்து இலங்கைக்கு உதவி வழங்குகின்ற ஸ்தாபனங்கள் வருமாறு.

1. யுனெஸ்கோ
2. யுனிசெப்
3. உலக சுகாதார தாபனம்
4. ஐ.நா.வின் சனத்தொகைக்கான நிதியம்

## ஐ.நா. உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்ட சில முயற்சிகள்

1. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் மீண்டும் ஒரு உலக யுத்தம் ஏற்படுவதை இதுவரை தவிர்த்துள்ளமை.
2. 1991ல் ஈராக் குவைத் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பிலிருந்து குவைத் நாட்டை விடுதலை செய்ய இராணுவ நடவடிக்கை எடுத்தமை.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1993ல் பொஸ்னியா - சேர்பிய யுத்தம் மூண்டபோது தமது பாது காப்புப் படையை சேர்பியாவுக்கு எதிராக அனுப்பியமை.

4. 1960-1963 காலப்பகுதியில் நடைபெற்ற கொரிய யுத்தத்தின்போது தலையிட்டு அதனை முடிவுக்குக் கொண்டு வந்தமை.

5. லிபியா, ஈராக், நைஜீரியா, பர்மா ஆகிய நாடுகளுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை விதித்து அந்நாடுகளைப் பலவீனமடையச் செய்தமை.

6. கிழக்கு திமோர் தனி நாடு பெறுவதற்கு உதவியமை.

## உலக சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஐ.நா. அடைந்த தோல்விகள் : சாதிக்க முடியாது போனவை :

1. 1967 முதல் இஸ்ரேல் - பலஸ்தீன நாடுகளிடையே சமாதானத்தை நிலைநாட்டி மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுத்த முடியவில்லை.

2. இந்திய பாகிஸ்தானிய நாடுகளிடையான காஷ்மீர விவகாரத்தை தீர்க்க முடியாது போனமை.

3. 1993 ல் பொஸ்னிய - சேர்பிய யுத்தத்தின்போது ஐ.நா.படைகள் சேர்பியாவிடம் தோல்வி கண்டமை.

4. செச்னியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு ரஷ்யா இடமளிக்காததால் ரஷ்யாவின் விவகாரத்தில் ஐ.நா.தலையிட முடியாதிருத்தல்.

## ஐ.நா.அமையத்தின் செயற்பாடுகள்

1. சர்வதேச பிரச்சினைகளை நல்லமுறையில் தீர்த்தல்
   உதாரணம் :
   1956 ல் சுயஸ்கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டபோது எகிப்திற்கும், பிரான்ஸ் இங்கிலாந்திற்கும் இடையில் ஏற்பட்ட போரை நிறுத்தியுள்ளது.

2. சர்வதேசசமூகத்தை ஒன்றுதிரட்டும் நோக்குடன் மாநாடுகளை நடத்தல்
   உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| நீர்வளங்கள் தொடர்பான மாநாடு | - | 1977 | |
| பெண்கள் தொடர்பான மாநாடு | - | 1977 | (நைரோபியில்) |
| சனத்தொகை தொடர்பான மாநாடு | - | 1987 | (மெக்சிக்கோ) |
| குழந்தைகள் தொடர்பான மாநாடு | | | (நியூயோர்க்) |

3. பொருளாதாரத் தடைகளை ஆக்கிரமிப்பு நாடுகட்கு எதிராக மேற்கொண்டது.

அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்

* 1997 - தென் ஆபிரிக்காவிற்கு எதிராக ஆயுத விநியோகத் தடை மேற்கொள்ளப்பட்டது.
* அண்மையில் லிபியா, ஈராக் ஆகிய நாடுகட்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

4. அமைதி காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. ஈரான், ஈராக் மத்தியில் அமைதியை ஏற்படுத்தி உள்ளது.
5. உலகில் ஆயுதப் போட்டிகளிற்கு முற்றப்புள்ளி வைப்பதற்காக மாநாடுகள் நடத்தப்பட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
   உதாரணம் :
   * 1963ல் அணுசக்தி ஆயுதங்களைப் பரிசீலிப்பதற்குத் தடைசெய்யும் ஒப்பந்தம்
   * 1965ல் அணு ஆயுதங்களில்லாத பிரதேசத்திற்கு அவற்றைக் கொண்டு செல்லத் தடை விதித்தமை.
6. சர்வதேச சட்டத்தை நாடுகளை ஒன்றிணைத்து உருவாக்கல்.
7. நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.
   உதாரணம் : உகண்டா மக்களுக்கு நிவாரணம்
8. பொருளாதார சமூகஅபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
   உதாரணம் :
   * ஐக்கிய நாடுகளின் கூட்டு மொத்தமான அமைப்பு ஒவ்வொரு வருடமும் வளர்முக நாடுகளின் பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டங்களிற்கு 3000 கோடி அ. டொலரை வழங்குகிறது.
   * இலட்சக் கணக்கான அகதிகட்கும் இடம்பெயர்ந்தவர்கட்கும் உணவு, இருப்பிட வசதி, மருத்துவ வசதியை வழங்குதல்
   * சிறுவர் நோய்த் தடுப்பு

## ஐ.நா.சபை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

* வளர்ந்து வரும் வல்லரசுகளின் அதிகார ஆக்கிரமிப்புக் கொள்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.
* பலஸ்தீனப் பிரச்சினை, இலங்கைப் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை போன்றவற்றில் அமைதி காண வேண்டும்.
* நிதிப் பற்றாக்குறை
* இராணுவத்தின் எண்ணிக்கை பற்றாக்குறையாக உள்ளமை



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகளின் கொடி / இலச்சினை

ஐக்கிய நாடுகள் கொடி நீலநிறப் பின்னணியையும் அதன் நடுவே வெள்ளைநிற இலச்சினையையும் கொண்டுள்ளது. இலச்சினையானது உலக சமாதானத்தைக் குறிக்கும் வகையில் ஓர் உலகப் படத்தையும் அதனைச் சூழ்ந்துள்ள ஒலிங்கிளைகளையும் கொண்டுள்ளது. ஐ.நா.கொடியைச் செய்யும்போது இலச்சினையானது சரிநடுவில் அமைவதையும் கொடியின் அகலத்தின் அரைவாசி அளவுடையதாக இருப்பதையும் உறுதிசெய்து கொள்ளவேண்டும். இக்கொடியின் வடிவமைப்பு 1947 ஒக்டோபர் 20ம் திகதி பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் உலக மக்களுக்குக் கூறியுள்ள சமூகம் தொடர்பான தூர நோக்கு.

சமாதானம், பொருளாதாரம் , சுற்றாடல் , சமூகநீதி. சனநாயகம் ஆகியவற்றை முக்கிய பிரதான கட்டாய இலக்குகளாகக் கொண்ட அபிவிருத்திக் கலாசாரத்தைப் புதியதும் கட்டாயமானதும், சமூக தூர நோக்காகவும் கொண்டு வளர்ந்து எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## ஐக்கிய நாடுகளின் இணைப்பு நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் கலாசாரக் கழகம் (UNESCO)
United Nations Educational Scientific and Cultural Organisation

ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல அமைப்பு (UNICEF)
United Nations Children's Educational Fund

உலக சுகாதார தாபனம் World Health Organisation (W.H.O)

உலக வங்கி (IBRD)
International Bank for Reconstruction ans Development

சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO)
International Labour Organisation

சர்வதேச நாணய நிதியம் International Monetary Fund (IMF)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
United Nations Development Program

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA)
United Nations Fund for Population Activities

உலக உணவுத் திட்டம் World Food Program. (WFP)

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் வங்கி

- கி.மு 3102 மாசி 17ம் திகதி ஆரியப்பாட்டாவின் கணிப்புப்படி கலியுகம் பிறந்தது.
- வினிட்செர்ப் இணையத்தின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.
- அமெரிக்க சுதந்திர சிலை பிரான்ஸ் நாட்டினால் வழங்கப்பட்டது.
- 2004ம் ஆண்டுக்கான புக்கார் விருது ''த லைன் ஒப் பியூட்டி'' (The Line of Beauty) நாவலுக்காக ''அலன் ஹொலிங் ஹேஸ்ற்'' க்கு வழங்கப்பட்டது.
- வயாகரா மாத்திரையைக் கண்டுபிடித்தவர் சைமன்காம்பெல்.
- 2004ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல்பரிசு பெண் எழுத்தாளர் (ஆஸ்திரியா) எல்பிரைட் ஜெலினெக்கிற்கு வழங்கப்பட்டது.
- இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் நுகவல.
- முதலாவது உலகக்கோப்பை துடுப்பாட்டப் போட்டி இங்கிலாந்தில் 1975 இல் நிகழ்ந்தது.
- ஒலிம்பிக்கில் இலங்கைக்கு முதன்முதலில் (1948 இல் தடைதாண்டி ஓட்டத்தில்) வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தவர் டங்கன் வைற்.
- உலகக் கோப்பைக் கால்ப்பந்து 2006 இல் ஜேர்மனியிலும் , 2010 இல் தென்னாபிரிக்கா விலும் நிகழும்.
- 2004 மார்ச் 29 இல் அயர்லாந்து உலகில் முதன்முதலாகப் பொதுஇடங்களில் புகைத் தலைத் தடைசெய்துள்ளது.
- உலகின் ஒரே ஒரு இந்து நாடு நேபாளம்.
- கடலிலே கலக்காத இந்திய நதி யமுனை.
- 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூ குறிஞ்சி.
- மெக்ஸிக்கோவில் வண்ணத்துப்பூச்சிகளுக்கு சரணாலயம் அமைந்துள்ளது.
- தமிழில் வெளிவந்த முதல் நாவல் பிரதாப முதலியார் சரித்திரம்.
- 28.06.1974 தொடக்கம் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது.
- போலியோ தடுப்புமருந்தை டொக்ரர் ஜோன்ஸ் சால்க் கண்டறிந்தார்.
- H.I.V வைரசை டொக்ரர் ல்யூக் மொண்டானியா கண்டறிந்தார்.
- சுதந்திரத்திற்கு முன்னைய பங்களாதேசத்தின் பெயர் கிழக்கு பாகிஸ்தான்.
- நேபாளத்தின் தேசிய விலங்கு பசு.
- குளோனிங் மூலம் பிறந்த முயலின் பெயர் என் - ரி 20 (NT - 20)
- அரபிக் கடலில் கலக்கும் மிகப்பெரிய நதி நர்மதா.
- உலகில் முதன்முதலாக ஆறு வளைகுடாக்களை நீந்திக் கடந்த பள்ளிச் சிறுவன் குற்றாலீஸ்வரன் (இந்தியா)
- பண்டா கரடி மூங்கில் இலைகளை மட்டுமே உண்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படியா ......?





- பிரேசில் நாட்டில் தேன் சேகரிக்கும் தேனீக்களை ஒரு வகையான வில்லன் தேனீக்கள் குழுக்களாகத் தாக்கி அழித்து விடுகின்றன. நல்ல தேனீக்களின் அழிவைத் தடுக்க தேனீக்களின் முதுகில் "மைக்ரோசிப்" என்னும் கணினிகளைப் பொருத்தி விடுகின்றார்கள். மைக்ரோ சிப்பிலுள்ள இன்ஃப்ராரெட் ரான்ஸ்மீற்றர்கள் அனுப்பும் செய்தியில் இருந்து வில்லன் தேனீக்களின் பாதையை இனங்கண்டு அவற்றை அழித்து விட ஏற்பாடு செய்கிறார்கள்.

- உடற்கலங்களில் உற்பத்தியாகும் மெலனின் (Melanin) என்னும் பதார்த்தம் நிறத்தின் அடிப்படையைத் தீர்மானிக்கின்றது. "அல்ட்ரா வயலற்" ஒளியில் இருந்து உடலைப் பாதுகாக்கின்றது. மெலனின் உற்பத்தியாகும் "என்ஸைம்" இல்லாவிடின் உடல்பூராவும் வெண்மையாக வெளிறிவிடும். "வெள்ளைக் காகம்" இப்படித்தான் உருவாகின்றது.

- முதன்முதலாக 1998 இல் உலகெங்கும் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோருக்கு பாப்பரசர் 2ம் ஜோன்போல் கிறிஸ்தவத் தலைமைப் பீடமான வத்திக்கானிலிருந்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

- இந்தியத் துடுப்பாட்ட வீரர் சௌரவ் கங்குலி கல்கத்தாவின் இளவரசன் (Prince of Culcutta) என அழைக்கப்படுகின்றார்.

- "டெல்ற்றா ஃபோர்ஸ் - 3" என்னும் அமெரிக்கத் திரைப்படப் பாணியில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதாக புலனாய்வுத்துறை குற்றம்சாட்டியதால் இந்தியாவில் இத்திரைப்படத்திற்குத் தடைவிதிக்கப்பட்டது.

- 1987 இல் நான்காவது உலகக் கோப்பை துடுப்பாட்டத்தின்போது சுழல் பந்து வீச்சாளர்களின் பந்துகளுக்கு "சிக்சர்" அடித்ததன் மூலம் இந்தியாவின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் நவஜோத் சிங் சித் "சிக்சர் சித்து" என்ற பட்டப் பெயரைப் பெற்றார்.

- "கீதாஞ்சலி" என்னும் கவிதை நூலுக்கு நோபல்பரிசு பெற்றவர் ரவீந்திர நாத் தாகூர். இந்தியா, பங்களாதேஷ் என்ற இருநாடுகளின் தேசிய கீதத்தினை இயற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தில் முன்பு இயங்கிய றீகல் தியேட்டர் தாகூரால் தான் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பில்பெர்க்



இது நிஜமா ? என்ற வகையில் திரையரங்கில் பிரமிப் பூட்டுவதில் இயக்குனர் ஸ்பில்பெர்க்கினை மிஞ்சுவதற்கு ஆளில்லை. வேற்றுக்கிரக வாசிகளின் பூலோக அனுபவத்தினை வெளிப் படுத்தும் E.T யும் , பல இலட்சம் ஆண்டுகள் முன்னர் அழிந்துவிட்ட டைனோசர்களை கல்லறைகளில் இருந்து மீண்டும் உயர்த்தெழ வைத்த 'ஜீராசிக்பார்க்'கும் சிறுவர்களின் உள்ளம் கொள்ளை கொண்ட 'லாஸ்ற் வேல்ட்'டும் அவரது திறமைக்குச் சான்றாகவே அமைந்திருக்கின்றன.



E.T

சின்னஞ்சிறு வயதில் தந்தையாரின் கமராவைத் திருட்டுத்தனமாக எடுத்துச் சென்று தனது புகைவண் டிப் பொம்மைகளை ஒன்றோடு ஒன்று மோதவிட்டுப் படம் பிடிப்பார். அப்போது பல்வேறு உத்திகளைக் கையாள் வார். கமராக்கலையில் ஆர்வம் ஏற்பட்டதால் வளர்ந்த தும் தொலைக்காட்சியில் பணியாற்றத் தொடங்கினார். இதன் தொடர்ச்சியாக சினிமாவில் பயணம்தொடர்ந்தது.

1975 இல் வெளிவந்த "ஜாஸ்" திரைப்படம் உலகம் முழுவதும் ஸ்பில்பெர்க்கினைப் பிரபலப்படுத்தியது. தொடர்ந்து 1982 இல் E.T.யும் 1993 இல் 'ஜீராசிக்பார்க்'கும் வெளிவந்து வசூல் சாதனை படைத்தன. E.T எடிட் டிங், பின்னணி இசை போன்ற விடயங்களில் ஒஸ்கார் விருது பெற்றது. எனி னும் சிறந்த இயக்குனருக்கான விருதை அவருக்குப் பெற்றுக் கொடுக்க வில்லை. 'ஜீராசிக்பார்க்'கும் அவருக்கு விருது பெற்றுக் கொடுக்கவில்லை.

மனைவி குழந்தையுடன்



1993ம் ஆண்டில் இரண்டாம் உலகப்போரில் யூதர்களுக்கு நேர்ந்த கொடு மையை மையமாகக் கொண்ட "ஷிண்ட் லர்ஸ் லிற் "என்ற கறுப்பு வெள்ளைப் படத் தினை இயக்கினார். ஒஸ்கார் விருது தேடி வந்தது.

உங்களால் மட்டும் எப்படி சிறுவர் களைக் கவரமுடிகிறது ? என்று கேட்டால் .... அவரின் பதில் " இது என்ன கேள்வி. நான் இப்போதும் சிறுவன் தானே ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினிதாசன் பதில்கள்



**ம. விகர்யா** அச்சுவேலி.

◆ ***வீதிகளில் வேகமாக வருகின்ற வாகனங்களைக் காவல்துறையினர் எதையோ வைத்து கண்டறிகிறார்களே அது என்ன?***

அதன் பெயர் " றொப்லர் ரேடர்" ( Doppler Radar). எக்ஸ் பண்டில் ( X band) இயங்கும் ஒரு சிறிய ரேடர். ட்ரான்ஸ் மீற்றரில் இருந்து நுட்பமான அலைகள் உருவாகி ஓடும் வாகனத்தின்மீது விழுந்து பிரதிபலிக்கும் ; அதன் துடிப்பெண் சிறியதிரையில் பதிவாகும். "றொப்லர்" விளைவைக் கொண்டு வாகனத்தின் வேகத்தை "மைக்ரோ" செக்கனில் காட்டிவிடும். துடுப்பாட்டத்தின்போது பந்து வீசும் வேகங்கூட இப்படியாகத்தான் பதிவுசெய்கிறார்கள். வில்வித்தையில் வில்லிலிருந்து அம்பு புறப்படும் வேகமும் றொப்லர் ரேடர் மூலம் கணக்கிடப்படுகின்றது.

**வி. மணிமாறன்** இமையாணன்.

◆ ***நெல்லிக் காய்களை உண்டபின் நீரைப் பருகினால் இனிக்கிறதே? ஏன் ?***

நெல்லிக்காயில் தனின் என்னும் இரசாயனப்பொருள் காணப்படுகின்றது. இது நீருடன் சேரும்போது கலிக்கமிலம் (Gallic Acid) எலாஜிக் அமிலம் (Ellagic Acid) என்பவற்றுடன் குளுக்கோசும் உண்டாகின்றது. இதனால்த்தான் நாக்கில் இனிப்புச் சுவை ஏற்படுகின்றது.

**பூ. உதயன்** சாவகச்சேரி.

◆ ***"சவ்வரிசி" என்னும் தானியம் எங்கிருந்து பெறப்படுகின்றது ?***

சவ்வரிசி என்பது தானிய வகை அன்று. " அத்தாப்பு " எனப்படும் ஒரு வகை மரத்தின் (பனை, தென்னை போன்ற) சோற்றி (குடல்) யிலிருந்து எடுக்கப்படுகின்றது. இம்மரம் ஆயுட்காலத்தில் ஒரு முறை பாளை ஈன்று காய்த்து பட்டுப் போகின்றது. இம்மரம் மலாய்த்தீவுகளில் காடாக வளர்கின்றது. பாளை வருவதன் முன் மரங்கள் தறிக்கப்பட்டு சோற்றி எடுக்கப்படுகின்றது. பின் உரலில் துவைத்து நீரில் கழுவும்போது பசையுள்ள பகுதிகளைத் தவிர மற்றப்பகுதிகள் போய்விடுகின்றன. பலமுறை கழுவிச் சுத்தம் செய்யப்படும். 15 வயதுடைய ஒரு மரத்தில் 250 முதல் 350Kg வரையான சவ்வரிசி எடுக்கலாம். சவ்வரிசியைக் காட்டு மலாய்க்காரர் "சாகோ" என்பார்கள். சாகோ என்பதற்கு உரொட்டி என்றும் பொருள்.

**வி. விஜயரூபன்** கரணவாய் மேற்கு.

◆ ***கோழிக்குஞ்சு நடக்கும்போது தலை ஏன் முன்னும் பின்னும் போகிறது?***

தான் நிற்கும் தரையில் தனது உடலின் பாரம் எல்லா இடங்களிலும் சமமாக இருக்கும்படி வைத்துக் கொள்வதற்காகவே கோழிக்குஞ்சு நடக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தலையை முன்னும் பின்னும் ஆட்டுகின்றது. நடக்கும்போது உடலினைச் சமநிலையில் பேண அனைத்து உயிரகளும் வெவ்வேறு செயல்முறையினைக் கையாளுகின்றன. குதிரை ஓடும்போது தலையை மேலும் கீழும் ஆட்டுகின்றது. நாம் நடக்கும்போது அல்லது ஓடும்போது கைகளை ஆட்டுகின்றோம்.

**சி. உமாதரன்** **உடுப்பிட்டி.**

◆ ***தேனை செயற்கையில் தயாரிக்க முடியாதா ?***


மனிதர்கள் தயாரித்த தேன் இயற்கைத் தேனுக்கு ஈடாகவில்லை. தேனைப் போலவே இருக்கும் Corn Syrup ஐ பதப்படுத்தியே தயாரித்தார்கள். தேனீ பூவிலுள்ள Nectar என்ற மதுவை உறிஞ்சித் தன்னுடலில் கொஞ்ச நேரம் வைத்திருந்து அதனுடன் சில "என்சைம்" களை சேர்த்துப் பதப்படுத்துகின்றது. பின் அடைகளில் சுரந்து வைக்கின்றது. வேலைக்காரத் தேனீக்கள் அதனைக் குடித்து , புரோட்டீன் போன்றவற்றைச் சேர்த்து அதில் இருக்கும் நீரை ஆவியாக்கி வெளியேற்றி விட்டு மீண்டும் அடைகளில் பத்திரப்படுத்துகின்றன. இதுதான் இயற்கைத் தேன். இப்படி ஒரு "தொழிற்சாலை" மனிதர்களால் உருவாகுமா .... ?



**கி. தயாளன்** **உடுப்பிட்டி.**

◆ ***வெளவால்களுக்கு இரவிலே கண்தெரியாது எனில் எப்படி சிறு நுளம்புகளைப் பிடித்து உண்கின்றன ?***

வெளவால்கள் பகலிலே தலைகீழாகத் தொங்கும். இரவிலே இரை தேடப் போகும். இது Sound Ranging மூலம் பறக்கிறது. வெளவால் தனது தொண்டையில் இருந்து வெளிப்படுத்தும் 150000க்கு மேற்பட்ட ஒலியளவைத் தமது காதால் கேட்க முடியாது. ஒரு செக்கனுக்கு இவ்வாறான ஒலியலைகளில் ஐந்திலிருந்து அறுபதுவரை (சில இருநூறு வரை) வெளிவிடும். தன்னுடைய ஒலியலை சென்று திரும்பும் தூரத்தில் இருந்து அப்பொருளுள்ள தூரத்தைக் கணக்கிடுகின்றது. வெளவாலின் காதுகளைக் கட்டிவிட்டால் அதனால் பறக்க முடியாது.






அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளவாலின் ஒலித் துடிப்பினுள் (Sonar) நுளம்பு காணப்படுமாயின், கும்மிருட்டானாலும் துரத்திச் சென்று உண்கின்றது. நிமிடத்திற்கு பத்து நுளம்புகளை உண்ணும்.

தென்அமெரிக்காவிலுள்ள ஒருவகை வெளவால் (Vampire Bats) உறங்கிக் கொண்டிருக்கும் மனிதனைக் கடித்து இரத்தம் குடிக்கக் கூடியது. கடிபட்டவருக்கு வலி தெரியாத வகையிலே கடிப்பதோடு இரத்தம் உறைந்துவிடாது தொடர்ந்து வழிந்துகொண்டிருக்குமாறு தனது எச்சிலினுள் இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்துகின்றது.

**உ. கம்சினி** **நல்லூர்.**

◆ ***ஒட்டகங்களின் உடம்பில் நீரைச் சேகரித்து வைக்கக்கூடிய பிரத்தியேக "நீர் வங்கி" இருக்கிறதா ?*** இல்லை !

நீர் அருந்தும்போது 20 லீற்றர் தண்ணீர் உறிஞ்சும் ஆற்றல் அதற்கு உண்டு. இவ்வாறு குடித்த நீர் அதனது உடம்பில் இருந்து அதிகம் செலவழிக்கப்படுவதில்லை. அதாவது ஒட்டகத்திற்கு பாலை வெயிலிலும் எவ்வளவு தூரம் நடந்தாலும் துளியும் வியர்ப்பது இல்லை.

**எஸ். அபூர்வன்** **கரணவாய்.**

◆ ***படையப்பா படத்திலும் " Bull Fight" களிலும் சிவப்புத் துணி கண்டு மாடு மிரளுகிறதே .... ? மாடு "நிறக்குருடு" என்பது பொய்யா ?***




தேனீ, கோழி, குரங்கு என்பன நிறங்களைப் பகுத்து அறியக்கூடியன. மாடுகளுக்கு நிறம் தெரியாது. "Bull Fight"இல் சிவப்புத் துணி விசிறும் போது மாடு மிரளுவது உண்மை தான். மஞ்சள், நீலம், பச்சை என எந்த நிறத்துணியை (ஆய்வாளர்கள்) விசிறிப் பார்த்தபோதும் மாடு மிரண்டதும் உண்மை. எனவே மாட்டை மிரள வைத்தது சிவப்பு அல்ல ; துணியின் அசைவு தான். மிருகங்களின் முந்தைய சந்ததிகள் இரவிலே வேட்டையாடிய காரணத்திலே தான் மிருகங்கள் கலர் ரீவியில் கூட கறுப்பு வெள்ளைப்படம் பார்க்கின்றன. படையப்பா பற்றிச் சொல்லத்தேவையில்லை. சினிமாவில் இதெல்லாம் சகஜமப்பா !

**ஆ. கோகுலன்** **தொண்டைமானாறு.**

◆ ***இசையால் மழை பொழியச் செய்யலாம் , பயிரின் விளைச்சலை அதிகரிக்கலாம். என்கிறார்களே ! நம்புவீர்களா ..... ?***

உயிர்ப் பொருட்களைக் கவரும் சக்தி இசைக்கு உண்டு என்பதை நம்புகின்றேன். (இசை மூலம் மழை பெய்ய வைக்கும் இசை மேதைகள் இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வில் இருக்கிறார்கள் என்ற செய்தி வெளியாகும் பத்திரிகைகளின் முன்பக்கத்தில் மழையின்றி சென்னை நகர மக்கள் அவதி என்ற செய்தியும் வெளியாகிறது )

சில வருடங்களுக்கு முன் ஆர்ட்டிக் பிரதேச பெர்ரிங் கடலில் தட்ப வெட்ப மாற்றத்தால் திடீரென்று கடல்நீர் பனிப்பாறைகளானது. பதறிப்போன திமிங் கிலங்கள் ஒட்டுமொத்தமாக ஓரிடத்தில் கூடின. அவற்றினைப் பனிப்பாறை சூழ்ந்துகொண்டது. ஆயிரக்கணக்கிலே " குழந்தை குட்டிகளுடன் " திணறிய திமிங்கிலங்களைக் கண்ட மீனவர்கள் இரக்கங் கொண்டு ரஷ்யக் கடற்படை க்கு அறிவித்தார்கள். கடற்படை வந்து பனிப்பாறைகளை உடைத்துக் கால் வாயை வெட்டிய பின்பும் , பயத்தின் காரணமாக திமிங்கிலங்கள் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. கப்பல் ஊழியர் ஒருவர் மேற்கத்தேய இசையை ஒலிபரப்பிக்கொண்டு கப்பலை ஓட்டிச் செல்ல " தாயைத் தொடரும் சேயாக" திமிங்கிலங்கள் கப்பலைத் தொடர்ந்து சென்று தப்பித்தன."
" இசையால் வசமாகா இதயம் எது ? "

**ப.சிவகாந் வல்வெட்டி.**

◆ ***ஸ்டெதஸ்கோப் கண்டறிய முன் எப்படி இதயத்துடிப்பினை அறிந்தார்கள் ?***

ஆரம்பகாலத்தில் மார்பிலே காதை வைத்தே இதயத்துடிப்பினை அறிந் தார்கள். ரெனே என்னும் (முழுப்பெயர் ரெனே தியோ பைல் ஹையாசினத் லய னெக் - Rene Theophile Hyacinthe Laennec) பிரெஞ் மருத்துவர் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவராகக் காணப்பட்டார். பெண்களின் மார்பிலே காதை வைத்து இதயத் துடிப்பினைக் கேட்க வெட்கப்பட்டதால் ஸ்டெதஸ்கோப் (Stethes Cope) என்னும் கருவியைக் கண்டறிந்தார். 1816 இல் கண்டறியப்பட்ட "ஸ்டெ தஸ்கோப் " பல்வேறு உருவ மாறுதல்களுக்கு உட்பட்டே இன்றைய வடிவம் பெற்றுள்ளது.






அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீர் தேசம்

## - 3 -

**வைரமுத்து**

அன்புள்ள தமிழ்ரோஜா !

இதுவரை உனக்கு நான் எந்தக் கடிதமும் எழுதியதில்லை. கடிதம் என்பது தூரங்களின் காகித வடிவம்.

உனக்கும் எனக்கும் தூரமில்லை. உன் காதுகள் என் உதடுதொடும் தூரத்திலேயே இருந்ததால் காகிதத்தில் பேசும் அந்நியம் நேர்ந்ததில்லை.

இன்னொன்று - காதல் கடிதங்கள் உணர்ச்சியின் மத்தாப்புகளாய் இருப்பதுண்டே தவிர உண்மையின் தீபங்களாய் இருப்பதில்லை.

ஒரு காதல் கடிதம் படிக்கப்படும்போதே எண்பது சதவிகிதம் கழிக்கப்பட வேண்டும். மிச்சமிருக்கும் இருபது சதவிகிதத்தில் உணர்ச்சியின் வண்டலின் கீழே உண்மையும் கொஞ்சம் உறைந்திருக்கும்.

உலகத்தின் காதல் கடிதங்களெல்லாம் அழகானவை. ஆனால் ஆரவாரமானவை.

நிலாவில் ரத்தம் கசிவது போல் - மீசையோடு பிறந்த குழந்தைபோல் - கவனம் ஈர்ப்பவை. ஆனால் எதார்த்தம் மீறியவை.

எனவே இடைவெளியிருந்தாலும் உனக்கு நான் எழுதியிருக்கமாட்டேன். பள்ளம் நிரப்ப நுரை கொட்டியிருக்க மாட்டேன்.

ஆனால் ! இப்போது எழுதுகிறேன். ஏனென்றால் இது காதல் கடிதமல்ல. என் தன்னிலை விளக்கம்.

உன்னைக் காதலிக்கத் தொடங்கிய பிறகு ஒருநாளில் எத்தனை மணிநேரம் நான் முட்டாளாயிருக்கிறேன் என்பதன் மொத்தத் தொகுப்பு.

நான் உன்னை நேசிக்கவில்லையோ என்று உன் உணர்வுகள் உறங்கும்போது நீ உச்சரித்தாய். என் காதலின் எடை என்ன என்பதை மில்லிகிராம் சுத்தமாய்ச் சொல்லிவிட முடியாது. கத்தியால் கைகீறி ரத்தம் காட்டவும் மாட்டேன்.

நேசம் காட்ட அனுமன் போல் நெஞ்சு கிழிக்கவும் மாட்டேன்.பின் - அடையாளம் எதுவென்பாய்.

என் வானத்தில் சூரியன் அஸ்தமிக்கவில்லையே. அது தான் அடையாளம். எந்தப் புதுப்பேனா வாங்கினாலும் என் பெயர் எழுதிப் பார்ப்பதை மறந்து அனிச்சைச் செயலாய் உன்பெயர் எழுதிப் பார்க்கிறேனே ! அதுதான் அடையாளம். கவிதைகள் அடையாளம். என் கண்ணீர் அடையாளம்.

ஒருநாள் என் அறையில் நீ தவறவிட்ட உன் பூப்போட்ட கைக்குட்டை என் பூஜைப் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வீட்டுக் கண்ணாடியில் உன்படத்தை ஓரத்தில் ஒட்டி உன் படத்தின் பக்கத்தில் என் பிம்பம் படியவைத்து ஜோடிப் பொருத்தம் கண்டு சுகம் காண்பதில் என் சிநேகமான காலைப்பொழுது செலவாகிறதென்று தெரியுமா உனக்கு ?

நினைவுக் கொசுக்களால் நித்திரை தொலைந்த ஒரு நீலராத்திரியில் கால் கடுக்க நடந்து கடற்கரை அடைந்து நீயும்நானும் சந்தித்த இடத்தில் அனாதைக் குழந்தைகளாய் அழுது கொண்டிருந்த உன் மல்லிகை உதிர்வுகளை மடியோடு அள்ளிவந்து மார்போடு தழுவிக் கொண்டு விடிய விடிய விழித்துக் கிடந்தேனே ! அந்த நேச உஷ்ணத்தின் நிறமறிவாயா நீ ?

என் பத்திரிகை அலுவலகத்தின் எக்ஸ்ரே கண்ணாளர்கள் உன்னையும் என்னையும் ஊடறுத்துப் பார்த்து , தமிழ் நாட்டிலேயே தமிழ்ப்பற்று அதிகமுள்ளவன் கலை வண்ணன் மட்டும் தான் என்று கிண்டல்மொழி சுண்டுவதைக் கண்டதுண்டா நீ?

பூமியின் அடிவயிற்றில் கனன்று கொண்டிருக்கும் அக்கினி மாதிரி என் மனத்தில் கனன்று கொண்டிருக்கும் ஆசை அக்கினி உன்னைச் சுடவில்லையா ?

என் நேசம் புரியும் முன்பு நீ என் நெஞ்சு புரிய வேண்டும். உன்னை உன் வாழ்க்கைக்குத் தயாரிக்கிறேன். தண்ணீரபயம் கொண்டு தள்ளி நின்றால் நாளை எப்படி வெந்நீராற்றில் விசைப்படகு விடுவாய் ? நீ சுத்தத் தங்கம் தான். நல்ல தங்கத்தில் நகைசெய்ய முடியாது. சிறிதே கலக்க வேண்டும் செம்பு.

தைரியம் செம்பு ; அனுபவம் செம்பு ; அதைத்தான் உன்னில் கலக்க நினைக்கிறேன்.

உன் கங்காரு மடியைவிட்டு வெளியே வா. நான் சிங்கத்தின் முதுகு . ஏறிக்கொள். முதலில் தார்ச்சூடு காணட்டும் உன் தாமரைப் பாதம்.

உன் வெல்வெட் திரைவிட்டு வெளியே வா. குளிரில் கோணி போர்த்துக் கூவம்கரைக் குடிசை ஒன்றில் இரவுகழி.

உன் சைவக்கோடு கட கூறுகட்டி மீன்விற்கும் குப்பத்துக் கிழவியைச் சற்றே நகரச் சொல்லி விட்டு ஒரு வெயில் பகலில் மீன் விற்றுப்பார்.

அரசாங்க லாரியில் தண்ணீர் பிடி. இரண்டு குடம் வேர்வைக்குப் பிறகு ஒரு குடம் தண்ணீர் நிறைவதை உணர்.

வெள்ளிக் கரண்டியோடு பிறந்தவளுக்கு ஏன் வேலையற்ற வேலை என்பாய். ஓர் ஆணியைச் சுயமாய் அடிக்கத் தெரியாதவளுக்கு வெள்ளிக்கரண்டி சொந்தமாய் இருக்கக் கூடாது. அனுபவங்கள் தடுப்பூசிகள் போட்டுக்கொள்.

அம்மை குத்த வந்தால் கைமறைக்கும் குழந்தைபோல் அடம்பிடிக்காதே. அனுபவங்களுக்கு உடம்பு , மனம் இரண்டையும் உட்படுத்து. தன்னைத் திரும்பிப் போடுவதன் மூலம்தான் பூமி சூரியனிடம் அனுபவம் பெறுகின்றது.

வசந்தம் - கோடை - மழை - குளிர் - வெயில் - புயல் என்ற அனுபவங்கள் இல்லையேல் எப்போதோ பூமி இறந்து போயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது

கல்யாணச் சந்தையில் உன்னைத் துலக்கி வைப்பதற்கு மட்டுமல்ல கல்வி. அனுபவங்களின் பால் ஆற்றுப்படுத்துவது கல்வி.

நமக்குள் ஆண் - பெண் என்ற பேதம் நம் அவசரத் தேவைக்காக மட்டும் இருக்கட்டும். மற்றபடி பிறப்பு முதல் இறப்புவரை உணர்ச்சியும் வலியும் ஒன்றுதான்.

ஆண் உடம்பில் ரத்தம் $5^1/_2$ லீட்டர். பெண் உடம்பில் 5 லீட்டர் என்ற பேதமிருந்தாலும் செல்களின் செயல்கள் ஒன்றுதான்.

எனவே ஆணுக்குத்தான் அதிக உரிமை. பெண்ணுக்கில்லை என்ற பிற்போக்குத்தனத்திலிருந்து பிதுங்கி வெளியே வா. ஏ பணக்கார நத்தையே ! முதலில் நீ உன் தங்கக்கூடு தகர். இந்தப் பிரபஞ்சமே பொதுவென்று கொள்ளாமல் மனிதர்கள் மனைப்பட்டா வாங்கும் போராட்டத்திலேயே மரித்துப் போகிறார்கள். பயன்படுத்தாத வானம் - பயன்படுத்தாத சூரியன் - பயன்படுத்தாத நட்சத்திரம் - பயன்படுத்தாத பூமி - பயன்படுத்தாத மூளை மனிதகுலத்துக்குப் பாக்கியிருக்கிறது. இரண்டு சதவிகிதத்துக்குமேல் மூளை இங்கே வேலைவாங்கப்படவில்லை. 98 சதவிகித மூளை சாகும்வரை செல்வியாகவே இருக்கிறது.

நான் என் புலன்கள் திறந்து பிரபஞ்ச எல்லைவரை பறக்கப் பிரியப்படுகிறேன். நீ மழையில் நனைந்த கிளிக்குஞ்சாய் மறுகி நின்றால் எப்படி ? சிறகு விரித்து வா ? சிலிரத்துவா.

உனக்கு நான் துன்பம் செய்திருந்தால் என்னை நீ மன்னித்துவிடு. நான் உனக்கு நறுக்க நினைத்ததென்னவோ நகம்தான். ஆனால் விரல் காயமாகிவிட்டது. எப்போதும் படுத்தே கிடக்காதே. தலையணையொன்றும் மார்க்கண்டேயனின் சிவலிங்கம் அல்ல.

நம்பிக்கையின் சக்தியை உடலெங்கும் பரப்பு ; உன்னை உணர் ; என்னை நினை. என்னை மன்னித்துவிட்டாய் என்பதன் அடையாளமாய் என் குயிலே தொலைபேசியில் கூவு. ஆலயமணிகளையும் மாதாகோயில் மணிகளையும் விட தொலைபேசி மணியில் தான் நம் காதல் பூஜிக்கப்படுகின்றது.

எப்போது கேட்கும் உன் தொலைபேசிச் சங்கீதம் ?

காதலோடு ......
கலைவண்ணன்

ஒரு தாய் தன் குழந்தையை உறங்க வைப்பது போல் கடிதத்தின் இமை மூடினான். காகிதப் பறவை சிறகடித்தது.

பத்திரிகைப் பணியை அவன் நேசிக்கிறான். அவனுக்கு உலகின் ஜன்னல்களை ஓசையோடு திறந்துவிட்டது பத்திரிகை. சூரியன் - பூமி - நிலா இவற்றை அவன் வாயில் மாத்திரைகளாய்ப் போட்டு தண்ணீர் ஊற்றியது பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் அவன் அதிகம் நேசிப்பது அவனுக்குத் தந்திருக்கும் சுதந்திரத்தை. அமைப்புச் சார்பு கொண்டவன் எவனும் இங்கே உண்மை சொல்ல முடிவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு சார்ந்து - அரசியல் சார்ந்து - மதம் சார்ந்து - தத்துவம் சார்ந்து உண்மைகள் முழுப் பிரசவத்தோடு வெளிவருவதில்லை. மக்கள் சார்பு கொண்டவன் மட்டுமே இங்கே உண்மை பேச முடியும்.

தன்னைப் போலவே தன் பத்திரிகையும் மக்கள் சார்பு கொண்டது என்ற நம்பிக்கையில் தான் அவன் அந்த நாற்காலிக்குத் தாலி கட்டியிருந்தான்.

ஒருவகையில் பத்திரிகையும் காதலிதான் ! இரண்டும் குறித்த நேரத்தில் வரா விட்டால் மாரடைப்பு வந்துவிடும்.

அந்தவாரத்தில் தனக்கான கட்டுரையை ஆதாரப்படுத்தி அழகுபடுத்தி உண்மைகளைக்காதிருக்க அங்கங்கே நகைச்சுவை தெளித்து நயம் சேர்த்தான்.

அவன் இருதயம் மட்டும் தூரத்து மேஜையில் துடித்துக் கொண்டிருந்தது. அங்குதான் தொலைபேசி இருந்தது. அந்த பிளாஸ்டிக் கூட்டுக்குள் அவன் குயில் எப்போது கூவும் ?

என் காதல் பூஜையின் கோயில்மணி எங்கே ?

தொலைபேசியில் ஒலிக்கும் என் தோடி ராகம் எங்கே ?

" தயவுசெய்து முணுமுணுக்கவும் " என்று தொலைபேசி அருகே எழுதி வைத்தால் என்ன ? கடைசியில் அது இசைத்தது. " கலைவண்ணன் கலைவண்ணன் " என்றே அழைத்தது.

ஒன்றாம் மணி அடங்கி இரண்டாம் மணி முடிவதற்குள் ஓடி எடுத்தான். பெருமூச்சும் பரபரப்பும் இழைய " நான் கலைவண்ணன் " என்றான்.

எதிர்முனையில் கண்ணீர் பேசியது ; தன் தாய்மொழியில் பேசியது.

கண்ணீரின் தாய்மொழி விசும்பல்தானே ?

**- 4 -**

இராயபுரம் கடலோரம்.

விஞ்ஞான அன்னங்களாய் விசைப்படகுகள்.

தண்ணீர்த் தவளைகளாய்க் கட்டுமரங்கள்.

தாலாட்டும் தண்ணீர்த் தொட்டிலில் வாலாட்டும் ஒரு கடற்கொக்கு. தண்ணீரில் தங்கம் கரைக்கும் சொக்கச்சூரியன்.

கடலுக்குள் தலைதூக்கும் கரும்பாம்பாய் நீண்டு கிடந்த அந்தத் தார்ப்பாலத்தின் முடிவில் கலைவண்ணன் மார்பில் தலைசாய்ந்து மடியில் மாலையாய்க் கிடந்தாள் தமிழ்ரோஜா.

அழுது அழுது கடைசியில் தூங்கிப் போகும் ஒரு குழந்தைமாதிரி விசும்பி விசும்பிக் கிடந்தவள் கண்ணீர் தீர்ந்து மௌனமானாள்.

" சத்தியம் செய்! இனி என் நேசத்தைச் சந்தேகிக்கமாட்டாயே ? "



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் காதுக்குள் காதலித்த கலைவண்ணன் அவள் அங்கங்களில் எதுவும் அவனுக்கு வெளியே வழியாத வண்ணம் வாரி எடுத்து வசதி செய்து கொண்டான்.

இரண்டு ஒட்டு மரஞ்செடிகளைக் கட்டுவது போல் அவளைத் தன் மார்போடு பதித்து முத்தப்பசையிட்டு ஒட்டிக் கொண்டான்.

அவள் உடம்பெங்கும் ஒரு பத்திரமான பாதுகாப்புணர்ச்சி பரவியது.

அது தான் !

ஒவ்வொரு பெண்ணின் உயிர்த்தேவை அதுதான். அந்த இதம் .... அந்தக் கத கதப்பான உத்தரவாதம் ... அந்தத் தடம் பதியாத தடவல்.... பாசம் குழைத்த ஸ்பரிசம். ஒவ்வொரு பெண்ணின் உள்ளாசை அதுதான்.

பெரிதும் பெண்கள் ஆராதிப்பது அதிரப்புணரும் அந்நிகழ்வை அல்ல. அவர்கள் அதி கம் விரும்புவது இந்த நேசம் நிஜம் என்னும் நினைப்பை. அவர்கள் பெரிதும் பிரியப் படுவது பின் கழுத்தில் விரல்பதித்துக் கூந்தல் ஆழத்தில் செய்யும் கோது கையை. பூக்களுக்குச் சுளுக்கெடுப்பது போல் விரல்களுக்குச் சொடுக்கெடுக்கும் அந்த வேடிக்கையை. தனக்குரியவனின் முடிகொண்ட மார்பில் முகம் புதைத்து - விழித்துக் கொண்டே உறங்கும் ஒரு மயக்கநிலையை.

அந்த மனோநிலையில் மயங்கிக் கிடந்தாள் தமிழ்ரோஜா. இமைகளை விழியில் இருந்தும் தன்னை அவன் மார்பிலிருந்தும் விலக்கிக்கொள்ள விரும்பாமல் வினவினாள்.

" எனக்கு ஏனிந்த வெயில் குளியல் ? "

" காதலைச் சுடுவதில்லை என்பது காலங் காலமாய் நிலவிவரும் சூரியத் தீர்மானம்"

" எப்போதும் என்னை இங்கே தான் அழைக்கிறீர்கள் மெரீனா பிடிக்காதா ?"

அவன் அவள் கன்னத்துக்கும் உதட்டுக்கும் இரண்டங்குல இடைவெளியில் பதில் பேசினான்.

" மெரீனா - திருமணத்தின்மீது நம்பிக்கையில்லாதவர்கள் சந்திக்கும் இடம். "

அவள் தளும்பிச் சிரித்ததில் அவள் கன்னம் அவன் உதட்டில் விழுந்தது.

" சரி...... சாந்தோம் ? "

" அது காதல் மீதே நம்பிக்கையில்லாதவர்கள் சந்திக்கும் இடம். "

" ஓகோ ! இது ? "

" நம்பிக்கை மீது நம்பிக்கை உள்ளவர்கள் சந்திக்கும் இடம். "

ஓர் அலை ஓங்கி எழுந்துவந்து கைதட்டிவிட்டு மீண்டும் கடலுக்குள் போனது. அந்த அலைஓசை அச்சத்தில் அவன் உடம்புக்குள் ஓடி ஒளிவது மாதிரி அவனுக் குள் ஒட்டி ஒடுங்கினாள் அவள்.

ஏ , கடலே ! நீ இன்னும் சில அலைகளை அடுத்தடுத்து எனக்காக அனுப்பி வைக் கக் கூடாதா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங்குழலின் காதில் உதடு ஊதுவதைப் போல அவன் அவள் காதில் குறைந்த குரலில் குனிந்து பேசினான்.

" உனக்குப் பிடித்த ஒரு செய்தியும் பிடிக்காத ஒரு செய்தியும் சொல்லட்டுமா ? "

ஒரு முறை கண்திறந்து 'ம்' சொல்லிவிட்டு மறுபடி மூடிக் கொண்டாள்.

" உனக்குப் பிடித்த செய்தி .... நீ கடைசிப் பரீட்சை எழுதியதும் தேர்வு மண்டபத்திலேயே நம் திருமணம். "

" சரி பிடிக்காத செய்தி ? "

"கடலுக்குள் தான் நம் முதலிரவு "

" அய்யோ ? "

அவள் அவனை நிஜமாய்க் கிள்ளிப் பொய்யாய் அழுதாள்.

தூரத்தில் கரையோரத்து விசைப்படகு ஒன்று கடல்புக எத்தனித்துக் கொண்டிருந்தது. அதன் எந்திர ஓசை ஓரத்தில் மேய்ந்த மீன்களையெல்லாம் ஆழத்தில் அனுப்பி வைத்தது. கலைவண்ணன் மீண்டும் கடல் பார்த்தான். மடியில் கிடக்கும் புதையலை மறந்து போனான். அவள் அவனை உதறி எழுந்தாள்.

ஊடல் கொடி பிடித்தாள்.

" உண்மையில் நீங்கள் நேசிப்பது கடலையா ? - என்னையா ?

" உன்னைத்தான். நிச்சயமாய் உன்னைத்தான். கடலைவிட மதிப்புடையவள் என் காதலியே நீ தான் "

" கடலை விட மதிப்புடையவளா ? " அவள் கண் விரித்தாள்.

" ஆமாம். ஒரு டன் கடல் தண்ணீர் .000004 கிராம் தங்கம் வைத்திருக்கிறது.

ஆனால் 72 சதவிகிதம் மட்டுமே தண்ணீர் கொண்ட உடலில் நீ 50 கிலோகிராம் தங்கமல்லவா வைத்திருக்கிறாய்.

நான் உன்னைக் காதலிப்பேனா ? கடலைக் காதலிப்பேனா ?

அவள் காதுகள் மூடிக் கத்தினாள். " போதும் ! போதும் ! உங்கள் புள்ளிவிபரம் போதும் ! "

கடலுக்குள் நுழைவதற்குத் தூரத்து விசைப்படகு துடித்துக் கொண்டிருந்தது.

" நான் கடல்பார்த்தபோதும் உன் கண்பார்த்த போதும் மட்டுமே பிரமித்திருக்கிறேன் தமிழ். நீலக்கடல் பற்றி நிறையப் படித்தேன். உன்னைப் படித்துக் கொண்டேயிருக்கிறேன். என் ஒவ்வொரு கனவிலும் உலாவரும் கடல் தேவதை நீதான் ! "

நீ கடல் ; நான் பூமி.

என் மீது உன் அலைகளை அனுப்பிக் கொண்டே இருக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தான் என்மீது புயல் வீசுகிறாய். நீதான் என்மீது மழை தூவுகிறாய்.

ஒவ்வொரு நாளும் என் ஓரக்கரைகளை அரித்து அரித்து என்னை உன் உள்ளிழுத்துக் கொண்டிருக்கிறாய்.

கடல் இல்லையென்றால் வானுக்கு நிறமில்லை. நீ இல்லையென்றால் என் வாழ்க்கைக்கு நிறமில்லை.

நீ கடல் ; நான் பூமி என்பது வெறும் உவமை அல்ல , உண்மை.

சூரியவெப்பத்தை உடனே உள்வாங்கி உடனே வெளிவிடுகின்றது பூமி. உடனே கொதித்து உடனே குளிர்ந்து விடும் என்னைப்போல.

"சூரியவெப்பத்தை மெல்ல மெல்ல உள்வாங்கி மெல்ல மெல்ல வெளிவிடுகிறது கடல் - அணு அணுவாக அன்பு வயப்பட்டு உயிர்நிறையக் காதலிக்கும் உன்னைப் போல "

" கலைவண்ணனுக்குப் புனைபெயர் " கடல்மைந்தன் " என்று வைக்கலாம். "

" நான் மட்டுமல்ல. ஒவ்வொரு மனிதனும் கடலின் மைந்தன் தான். ஒவ்வொரு பெண்ணும் கடலின் புத்திரி தான். ஒன்றை மறந்தேன். இன்னொரு வகையிலும் நீதான் கடல் ; நான் தான் பூமி "

" எந்த வகையில் ? "

" மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர் இருந்தும் மிச்சமுள்ள பூமி. தாகத்தால் தவிக்கிறதே அதைப்போல - அமிர்தப் பாத்திரமாய் நீ அருகிருந்தும் தாகப்பட்ட மனசு தவியாய்த் தவிக்கிறதே ! "

தள்ளியிருந்த தமிழ்ரோஜா தாவும் குழந்தையாய் அருகில் வந்தாள்.

" அதுதான் எனக்கும் ஆச்சரியம். தண்ணீர் இவ்வளவிருந்தும் தாகம் ஏன் தீரவில்லை ? "

" புள்ளிவிபரம் சொன்னால் பொறுத்துக் கொள்வாயா ? "
" கொள்வேன் "

" சொல்வேன். பூமியின் தண்ணீரில் 97 சதம் கடல் கொண்ட நீர். உப்புநீர், குடிக்க உதவாத நீர். "

மிச்சமுள்ள 3 சதம்தான் நிலம் கொண்ட நீர். அதில் 1 சதம் தண்ணீர் துருவப் பிரதேசங்களில் பனிமலைகளில் உறைந்து கிடக்கிறது.

1 சதம் தண்ணீர் கண்டு கொள்ள முடியாத ஆழத்தில் மொண்டு கொள்ள முடியாத பள்ளத்தில் கிடக்கிறது. மனிதகுலம் பயன்படுத்துவதெல்லாம் மிச்சமுள்ள 1 சதத்தைத்தான்.

"அய்யோ அந்த 1 சதமும் தீர்ந்துவிட்டால் ... ? "
" தீராது தண்ணீர் பூமிக்கு வெளியே போய்விட முடியாது. ஒவ்வொரு மனிதனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருகுவது பயன்படுத்தப்பட்ட பழைய தண்ணீரைத்தான். தண்ணீரும் காதலைப் போலத்தான் அதன் மூலகங்கள் அழிவதில்லை."

தூரத்து விசைப்படகு தண்ணீர் கிழிக்கத் தயாரானது. கிழக்கு நோக்கித் தன் மூக்கை மொத்தமாய்த் திருப்பியது. கலைவண்ணன் கரையில் இருந்து கொண்டே மீண்டும் கடலில் மூழ்கினான். விழித்துக் கொண்டே கனவில் பேசினான்.

"கடல் ! அது ஒரு தனி உலகம். பள்ளி கொண்ட விஸ்வரூபம் ! எண்பத்தையாயிரம் உயிரவகை கொண்ட உன்னத அரசாங்கம்."

அடுத்த நூற்றாண்டு உணவுத் தேவையின் அமுதசுரபி. முத்துக்களின் கர்ப்பப்பை. பவளங்களின் தொட்டில். மங்கனீஷ் பாறைகளின் உலோக உலகம். பெட்ரோல் ஊற்றின் பிறப்புறுப்பு. கலங்கள் நகரும் திரவத்திடல். அது கவிஞர்களின் கனா. விஞ்ஞானிகளின் ஆய்வுக்கூடம். ஞானிகளின் தத்துவம்.

விசைப்படகு அந்தக் காதலர் பாலம் கடந்துதான் கடல்புக வேண்டும்.

இப்போது ததும்பித் ததும்பி அவர்களை நோக்கித் தவழ்ந்து வந்தது அந்த டீசல் பறவை.

தூரத்துச் சித்திரங்களாய் அதன் விளிம்பில் சில மீனவர்கள். படகு நெருங்க... நெருங்க ....ஓ ... ! அவனுக்குத் தெரிந்தவர்கள். அவனை நேசிப்பவர்கள். மீனவர் போராட்டத்தில் கைதாகி அவன் எழுத்துக்களால் மீட்கப்பட்டவர்கள். அவர்களும் அவனைக் கண்டுகொண்டார்கள்.

" கலைவண்ணன் கலைவண்ணன் "

எந்திர ஓசை கிழித்துக் குரலெடுத்துக் கூவினார்கள். அவன் மடியில் படுத்துக் கிடந்தவள் வெடித்துப் பூத்தாள். விசைப்படகை வெறித்துப் பார்த்தாள். பிறகு கண் களால் கேள்வி கேட்டு மௌனம் காத்தாள்.

கண்ணிமைக்காத கலைவண்ணன் - " தோழர்கள் ; என் மீனவத் தோழர்கள் " என்றான்.

" என்ன பேனாக்காரரே ! கடலோடு போய் வருவோம். வாருங்களேன் ! "

விசைப்படகிலிருந்து வீசிய அழைப்பு காற்றுவழி மிதந்து கரையேறியது. பாலம் நோக்கியே படகும் வந்தது.

" காதலியே ! தமிழ்ரோஜா ! கடல்சென்று வருவோமா ?

கண்ணடித்துச் சிரித்தான் கலைவண்ணன்.

" அய்யோ ? " அவள் பெங்குவின் பறவைபோல் பின்வாங்கினாள்.

" கொஞ்சத்தூரம் போகலாம். சுத்தமான காற்று ; சுகமான தாலாட்டு ; தரையில் விழுந்த ஆகாயமாய்க் கடல் பார்க்கலாம். ஓராயிரம் பறவைகளின் ஊர்வலம் பார்க்க லாம். உடனே திரும்பலாம். "



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கள் பின்னுக்கிழுக்க - அச்சத்தில் முகம் வியர்க்க - " வேண்டாம் அந்த விபரீதம்" என்று விலகி ஓடினாள். படகு பக்கத்தில் வந்துவிட்டது. கலைவண்ணனைப் பார்த்துக் கத்தினார்கள்.

" கடலுக்குள் போய் வருவோம் ; மீன்விருந்து வைப்போம் ; மாலைக்குள் கரைசேர்ப்போம் " ஒரே கதியில் உரைநடையில் பாடினார்கள். படகு நின்றது பாலம் உரசி.

" தயவுசெய்து வா தமிழ் " கலை கெஞ்சினான்.

" வேண்டாம் ; வேண்டாம். மாட்டேன் ; மாட்டேன். "

அவள் சுடுமணலில் விழுந்த ஒற்றை மழைத்துளியாய் ஓடி மறையப் பார்த்தாள்.

" நீங்களும் வாருங்கள். தங்கையும் வரட்டும் " அழைப்புக் குரல்கள் அதிகமாயின.

" இப்படி அஞ்சினால் எப்படி ? பாதுகாப்பான பயணம் இது. சின்னச் சின்ன அனுபவங்கள் வேண்டாமா ? சிறகடி என்னோடு ! வா தமிழ் ! வா ! "

அவள் சுருங்கினாள். இவன் நெருங்கினான். அவள் அஞ்சி விழித்தாள். இவன் கெஞ்சி அழைத்தான். அவள் வழிந்தாள். இவன் அள்ளினான். அங்கே அரங்கேறியது ஓர் அகிம்சை இம்சை.

அவளை மார்போடு அள்ளிக் கவனமாய்க் கால்வைத்து விசைப்படகில் குதித்தான். தாலாட்டும் படகில் தடுமாறி விழுந்தான். வீழ்வது அவனாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும். தமிழ் காயப்படாமல் கட்டிக் கொண்டான். அவள் உள்ளாடிய அச்சத்தில் ஊமையானாள். மீனவர்கள் கைதட்டி ஒலியெழுப்ப கிலிகொண்டது கிளி.

" பயப்படாதே தமிழ். பார் என் தோழர்களை. அவர் பாண்டி; இவர் பரதன் ; இவர் இசக்கி ; அவர் சலீம். "

எல்லோரையும் அவள் வேர்த்த முகத்தோடு வெறித்துப் பார்த்தாள். அவளை அவர்களுக்கு அறிமுகம் செய்தான்.

" இவள்தான் தமிழ்ரோஜா ! இப்போது மனைவிபோல் இருக்கும் என் காதலி. பின்னாளில் காதலிபோல் இருக்கப்போகும் என் மனைவி. "

விசைப்படகு விரைந்து படபடத்தது.

தமிழ்ரோஜா இதயம் இரண்டு மடங்கு துடிதுடித்தது. **( தொடரும் )**

*******************

**அடுத்த இதழில் ............**

**௨0ம் நூற்றாண்டு நிகழ்வுகள்**

**1900ம் வருடத்திலிருந்து நிகழ்ந்த நிகழ்வுகளின் தொகுப்பு தொடராகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்ஸன்



பதவிக்காலம் முடியு முன்பே பதவி விலகிய அமெரிக்க ஜனாதிபதி யார் ? என்று கேட்டால் அரசியல் சரித்திரம் படித்தவர்கள் " ரிச்சர்ட் நிக்ஸன்" என்று பதில் உரைப்பார்கள். அவர் ஏன் பதவி விலகினார் தெரியுமா ?

1972ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியான நிக்ஸனின் பதவிக் காலம் முடிந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. ரிபப்ளிக்கன் கட்சியும் , டெமோக்ரட்டிஸ் கட்சியும் தேர்தலுக்குத் தயாரானது. ரிபப்ளிக்கன் கட்சி வேட்பாளராக நிக்ஸன் களமிறங்கினார்.

டெமோக்ரட்டீஸ் கட்சியின் தேர்தல் வியூகங்களை அறிய ஒட்டுக் கேட்கும் கருவிகளுடன் "வேற்றர்கேற்" கட்டடத்தினுள் (Democratic Party இன் தலைமையகம் ) சிலர் நுழைத்து பிடிபட்டனர். அவர்கள் நிக்ஸனின் கூலியாட்கள் என்பது தெரியவந்தது. எனினும் விவகாரம் பெரிதாகாமல் நிக்ஸன் பார்த்துக் கொண்டார்.

நிக்ஸன் தேர்தலில் வென்று ஜனாதிபதியான சமயத்தில் "வோசிங்ரன் போஸ்ற்" பத்திரிகை விடயத்தினை துப்பறிந்து செய்தி வெளியிட்டது. இதனால் நிக்ஸன் நீதிமன்றம் செல்ல நேரிட்டது. ஜனாதிபதி ஒருவர் ரகசியங்களை ஒட்டுக் கேட்க முனைந்ததை நீதிமன்றம் கண்டித்தது. மன்னிப்புக் கேட்டு மன்றாடி நிக்ஸன் பதவி விலகினார்.

நிக்ஸனது கையெழுத்திட்ட நினைவுச் சாசனம் நிலவில் நாட்டப் பட்டுள்ளது. எனினும் நிக்ஸன் பற்றிய அமெரிக்க மக்களின் நகைச்சுவை பின்வருமாறு அமைந்துள்ளது.

**அமெரிக்கர் I :** நிக்ஸனின் முத்திரைக்கும் மற்றையவர்களின் முத்திரைக் கும் என்ன வித்தியாசம் ?

**அமெரிக்கர் II :** மற்றவர்களின் முத்திரையில் மக்கள் ஒரு பக்கம் தான் எச்சில் துப்புவார்கள். நிக்ஸனின் முத்திரையில் இருபக்கமும் துப்புவார்கள்.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

- சினிமாத் தொழில்நுட்பத்தினை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் லூமியர் சகோதரர்கள் ( 1895)
- ஈஸ்ட்மென்கலர் (Eastman Colour) பிலிமைக் கண்டறிந்தவர் கொனிக்கா ( 1952)



- அதிக ஒஸ்கார் விருதுகளைப் பெற்றவர் வால்ட் டிஸ்னி. வாழும்போது 20 விருதுகள். மரணத்தின் பின் 6 விருதுகள்



- ஆங்கில மொழியல்லாத படத்தில் முதன்முதலில் ஒஸ்கார் விருது பெற்ற படம் மான்ஸ்யர் வின்சென்ட் ( பிரான்ஸ்)
- அதிக ஒஸ்கார் விருதுகள் (11) பெற்ற படங்கள் பென்ஹர் ( 1952) டைட்டானிக் ( 1997) " த லொட் ஒப் த ரிங்கஸ் த ரிற்றேன் ஒப் த கிங் " ( 2003)
- ஒரே கதாபாத்திரத்தினை மையமாகக் கொண்டு பகுதிகளாக எடுக்கப் பட்ட படங்களில் ஒஸ்கார் விருது பெற்றது " தி கோட் பாதர் " படமாகும். " தி கோட்பாதர் I " ( 1972) மார்லன் பிராண்டோவிற்கும் "தி கோட்பாதர் II "ராபார்ட் டி நீரோ விற்கும் விருது பெற்றுக் கொடுத்தது (மாபியா கும்பலின் தலைவன் கார்லியோன் கதாபாத்திரம்)





Mrs.Doubtfire

- தமிழ்ப்படமான " அவ்வை சண்முகி" யின் மூலமான " மிஸர்ஸ் டவுட் ஃபயர்" 1993 இல் ஒப்பனைக்கான ஒஸ்கார் வென்றது.



அவ்வைசண்முகி

- தமிழில் வெளியான முதற்கதை கூறும் படம் கீசகன் வதை ( 1919)
- தமிழில் வெளியான முதற்பேசும் படம் காளிதாஸ் ( 1931)
- இந்தியாவில் வெளியான முதற்பேசும் படம் ஆலம் ஆராவே ( 1931)
- தமிழில் வெளிவந்த முதல் வர்ணத் திரைப்படம் - அலிபாபாவும் நாற்பது திருடர்களும்.
- தமிழில் வெளிவந்த முதல் அகலத்திரை (70mm) படம் - இராஜராஜ சோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடலே இல்லாத முதல் தமிழ்ப்படம் - அந்த நாள்
- தமிழ்த்திரையுலகின் முதற்பெண் இயக்குனர் டி.பி.ராஜலட்சுமி ( மிஸ்.கமலா 1936)



- 1000 படங்களுக்கு மேல் நடித்து கின்னஸ் சாதனை புரிந்தவர் - மனோரமா
- 101 படங்களைத் தயாரித்து கின்னஸ் புத்தகத்தில் (2001ம் ஆண்டுப் பதிப்பில்) இடம்பிடித்தவர் டி.ராமநாயுடு



- "சிம்பனி " இசைக் கோலத்தை உருவாக்கிய ஆசிய நாட்டவர் இளையராஜா.
- இளையராஜாவின் "சிம்பனி" இசைக்கோலம் பயன் படுத்தப்பட்ட படம் " ஹேராம் "
- பிரேதமாகக் கதாபாத்திரம் ஏற்று நகைச்சுவை ஊட்டிய நடிகர் நாகேஷ் ( மகளிர் மட்டும்)



- சிறந்த நடிகருக்கான தேசியவிருதினை அதிக முறை பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகர் கமல ஹாசன் (மூன்றாம்பிறை, நாயகன் , இந்தியன் + அவ்வை சண்முகி )
- வெளிநாட்டு விருதினை முதன் முதலில் பெற்றதோடு ; செவாலியர் விருதினைப் பெற்றும் சிறந்த நடிகருக்கான தேசிய விருதினைப் பெறா தவர் சிவாஜிகணேசன்
- எம்.ஜி.ஆருக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்றுக் கொடுத்த படம் ரிக்ஷாக்காரன்.
- சிறந்த படத்திற்கான தேசிய விருது பெற்ற ஒரே ஒரு தமிழ்ப்படம் மறு பக்கம் ( இயக்கம் - சேதுமாதவன்)
- அதிக தேசியவிருது பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடல் ஆசிரியர் வைரமுத்து.



- எம்.ஜி.ஆர் , கமல் என்னும் இருவரையும் தவிர சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்றவர் விக்ரம் (பிதா மகன்) -
- தமிழில் குழந்தைகளை வைத்து எடுக்கப்பட்ட முதற்படம் பால யோகினி ( 1937)
- இலங்கையின் முதலாவது சிங்களப் பேசும் படம் - கடவுனு பொறந்தவ (1947 ஜனவரி 21 சுந்தரம் மதுர நாயகம் என்ற தமிழரால் தயாரிக் கப்பட்டது )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கையில் வெளிவந்த முதற்தமிழ்ப்படம் (16MM) சமுதாயம் (ஹென்றி சந்திரவன்ச என்ற சிங்களவரால் தயாரிக்கப்பட்டது.)



- இந்தியாவில் சினிமாத்துறையில் இருந்து எம்.ஜி. ஆர், கருணாநிதி, ஜெயலலிதா, என்.ரி.ஆர் போன்றோர் முதலமைச்சர் ஆனார்கள். அமெரிக்காவில் ஆனோல் ஸ்வாஸ்நேக்கர் கலிபோர்ணியாவின் மேயரானார். ஆனால் ரொனால்ட்ரீகன் மட்டும் தான் சினிமாத்துறையல் இருந்து சென்று ஜனாதிபதியானவர்.



“அம்புலிமாமா” பாணிக் கதையோடு “ஸ்பிளிற் பெசனாலிற்றி” (ஒருவர் இன்னொருவராக மாறும் தன்மை) என்ற மனோதத்துவ முறையினைக் கலந்து பின்னப்பட்ட படம் தான் சந்திரமுகி.

தாழ்ந்த ஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்த தன் தந்தைக்கும் , தாழ்ந்த ஜாதிப் பெண்ணான தாய்க்கும் நிகழ்ந்த கொடுமைகளைக் கண்டு, மகளான கங்கா (ஜோதிகா) மனநிலை பாதிக்கப்படுகிறாள். பெற்றோரின் மரணத்தின் பின் பாட்டியால் வளர்க்கப்படுகிறாள். பாட்டி சொல்லும் கதைகளிலுள்ள கதாபாத்திரமாகவே மாறும் இயல்பு அவளிடம் ஏற்படுகின்றது. பாட்டியின் இழப்பிலிருந்து மீள குறும்புத்தனமான வாழ்க்கையினைக் கைக்கொள்கிறாள்.

கங்கா பெரியவளானதும் செந்தில்நாதனைத் (பிரபு) திருமணம் செய்கிறாள். கங்காவின் தூண்டுதலால் வேட்டயபுரம் அரண்மனை விலைக்கு வாங்கப்படுகின்றது. அரண்மனை வாங்கிய பிரச்சினையில் இருந்து செந்திலைக் காப்பாற்ற சரவணன் (ரஜனி) வருகிறார்.

சரவணன் ஒரு மனோதத்துவ மருத்துவர். எவராவது மனதில் எதையாவது நினைத்தால் உடனே சொல்லிவிடக் கூடியவர். அமெரிக்காவில் மனோதத்துவம் படித்துத் தங்கப்பதக்கம் பெற்றவர். மனோதத்துவ மேதை பிராட்லீயின் பிரதம சீடர்.

வேட்டயபுரம் அரண்மனையில் பல வருடங்களுக்கு முன்னர் இறந்த சந்திரமுகியின் ஆவி இருப்பதாக அங்குள்ளவர்கள் நம்புகின்றனர். “நாட்டியக்காரியான சந்திரமுகி குணசேகரனை விரும்புகிறாள். ஆனால் வேட்டையர்ராஜா அவளைப் பலவந்தமாகத் திருமணம் செய்கிறார். எனினும் சந்திரமுகி குணசேகரன் காதல் தொடர இருவரும் வேட்டையராஜாவால் துர்க்கா அஷ்டமியன்று கொல்லப்படுகின்றனர்” - இதுதான் பல வருடங்களுக்கு முன் நிகழ்ந்த சந்திரமுகியின் கதை.

கதையை அறிந்த கங்கா, சந்திரமுகியாகிறாள். அவளுக்குள் இருக்கும் சந்திரமுகியினை மனோதத்துவ முறையிலும் பூசை மூலமும் அகற்ற படம் முடிகிறது.

வர்த்தக ரீதியான வெற்றிக்குச் சாதகமாக வித்தியாசாகரின் இசையிலான பாடல்கள் காணப்படுகின்றன. நடிப்பில் ஜோதிகா மிளிர்ந்திருக்கிறார். குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ள பாம்பினை ரஜனி ரசிகர்கள் புரிந்து கொள்வார்களா ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறும்பு தின்னி

## (ANT EATER)

எறும்பு , கறையான் என்பவற்றை உண்டு உயிர்வாழும் பிராணி தான் எறும்பு தின்னி. இது வெவ்வேறு வகைகளில் காணப்படுகின்றது. தென்அமெரிக்காவில் காணப்படும் பெரிய உடல் அமைப்புடைய எறும்பு தின்னியின் நாக்கின் நீளம் 2 அடியாகும். எறும்பு கறையான் என்பன வாழும் பொந்தினைக் கிளறி உள்ளே தமது நாக்கினைச் செலுத்துகின்றது. ஒட்டுந் தன்மையுள்ள அவற்றின் மெல்லிய நீண்ட நாக்கு இரைகளைக் கவரு கின்றது. இவற்றுக்குப் பற்களே கிடையாது. பறவைகளைப் போன்று தசை செறிந்த அரைப்புப் பையைக் கொண்டுள்ளன. இங்குதான் எறும்பு , கறை யான் என்பன அரைக்கப்படுகின்றன.

எறும்பு தின்னிகளிடம் விநோதமான பழக்கம் ஒன்று உண்டு. குறித்த புற்றினைக் கிளறி பத்து நிமிடத்திற்கு எறும்புகளையோ அல்லது



கறையான்களையோ உண்ணும் பின்னர் கிளறுவதை நிறுத்திவிட்டு அடுத்த புற்றுக்குச் சென்றுவிடும். ஒரே புற்றில் முழுமையாக உண்பதில்லை. இது இயற்கையின் படைப்பிலுள்ள விநோதம். ஒரு புற்றினை முழுமையாகக் கிளறி உண்டால் புற்று அழிந்துவிடும். எறும்போ கறையானோ மிச்சமிருக்காது. எறும்பு தின்னிகளின் இச்செயற் பாட்டால் எறும்பு, கறையான் என்பன அழியாதிருப்பதோடு எறும்புதின்னி களும் உணவுத் தட்டுப்பாடின்றி அழியாதிருக்கும். ( ஒட்டகச் சிவிங்கி ஒரே மரத்தின் இலைகளை முழுமையாக உண்ணாமைக்கும் இதுதான் காரணம்)

தென்னாசியாவிலும் மத்திய ஆபிரிக்காவிலும் காணப்படும் பங்கொலின் (Pangolin) என்னும் எறும்பு தின்னி முலையூட்டிகள் தடித்த செதில்களால் உடல்பூராவும் போர்க்கப்பட்டிருக்கும். எறும்பு தின்னியின் வாழ்க்கைக்காலம் 14 வருடம் . குட்டி - ஒன்று. இவற்றின் நிறை 18 முதல் 23 கிலோகிராமாகும்.



அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேகுவாரா



ஆர்ஜென்டினாவில் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தவர் சேகுவாரா. மருத்துவம் படித்த இவர் மருத்துவத் தொழிலைச் செய்வதில் ஆர்வம் மிக்கவராக இருந்தார். எனினும் கௌதமாலா நாட்டின் ஆட்சியை அமெரிக்க சுய நலத்திற்காகத் தூக்கி எறிந்தபோது அந்நாட்டு மக்கள் மௌனம் காத்த செயல் சேகுவாராவின் வாழ்வைத் திசை திருப்பியது. அமெரிக்காவின் அட்டூழியம் பற்றி புரட்சி வசனங்களை எடுத்துரைத்து மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டிட முற்பட்டார். இதனால் அவருக்கு ஆபத்து ஏற்பட்டது. சேகுவாரா மெக்ஸிக்கோவிற்குத் தப்பி ஓடினார்.

கியூபாவில் ஆட்சி செய்த சர்வாதிகாரி "பாடிஸ்ரா"வுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த "(F) பிடல் காஸ்ரோ"வின் நட்புக் கிடைத்தது. காஸ்ரோவின் தலைமைத் தளபதியானார். கியூபாவின் சுதந்திரத்தின் பின் அந்நாட்டில் பொருளாதார அமைச்சரானார். எனினும் அவரால் அமைச்சராக நீடிக்க முடியவில்லை. காங்கோ நாட்டுப் போராளிகளுக்கு காஸ்ரோவின் வழிகாட்டல் தேவைப்பட்டது. இதனால் திடீரென்று தலைமறைவானார்.

"காஸ்ரோவுக்கும் சேகுவாராவுக்கும் கருத்து வேறுபாடு" என்று பொய்ப்பிரசாரம் செய்த அமெரிக்க உளவு நிறுவனம் உலகம் முழுக்க காஸ்ரோவைத் தேடியது.

இரண்டு வருடங்களின் பின்பு பொலிவியா நாட்டுப் போராளிகளுக்கு காஸ்ரோவின் உதவி தேவைப்பட பொலிவியா சென்றார். பொலிவியாவின் பழங்குடிமக்களை பொருளாதார ரீதியாக அமெரிக்கா நசுக்கி வந்தது. அதற்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார். உலக வரலாற்றில் அமைச்சர் ஒருவர் போராளியாக மாறி ஆயுதம் ஏந்திப் போராடியது என்றால் அது சேகுவாரா மட்டும் தான்.

சேகுவாராவால் பயிற்சி அளிக்கப்பட்ட ஒருவன் துரோகியாகி அமெரிக்க உளவுத்துறைக்குக் கொடுத்த தகவலின்படி பொலிவியாவில் உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய இராணுவம் அவரைச் சுட்டுக் கொன்றது. இறக்கும் நேரத்திலும் அந்த மாவீரன் இமை மூடவில்லை. கண்கள் திறந்தபடியே அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிஷி காளான்

✲ மூலிகைகளின் அரசன்
✲ உப உணவுப் பொருள்

**DXN** தயாரிப்புக்கள் , ராஜ மூலிகை என்றழைக்கப்படும் அதிகூடிய மருத்துவத் தன்மை கொண்ட சிவப்புநிற ரிஷிகாளானில் இருந்து தயாரிக்கப்படுகின்றன. இவை மலேசியாவில் உற்பத்தி செய்யப்பட்டு இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இது உடலில் நோயை ஏற்படுத்துகின்ற நச்சுக்களை வெளியேற்றி , இரத்தத்தைச் சுத்தப்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி, தேவையான போஷாக்கை வழங்கி எமக்கு ஆரோக்கியமான வாழ்வை அளிக்கின்றது.


**இதன் தயாரிப்புகள் :** Ganozhi Shampoo , Ganozhi Tooth Paste , Ganozhi Soap , Lingzhi Coffee 3 in 1, RG - 30, RG - 90, GL - 30, GL - 90 Tablets

**V.VIJAYANESAN ,**
36 , Temple Road,
Kokuvil East , Kokuvil.
**T.P : 021 2226196 H.P : 0777 - 730708**

**க. சிவம் ,**
போக்காலை வீதி ,
உடுப்பிட்டி.
**T.P : 077 6158865**

## சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்

அன்பளிப்பு அழகுசாதனம் எவர்சில்வர் மின்சாரப் பொருட்கள் அலுமினியம் மற்றும் ............



**தொலைத்தொடர்பு**

**போட்டோ பிரதி**





**பக்ஸ் அடையாள அட்டை கவரிடுதல்**

**யாழ்.கொழும்பு பயண சேவை**



**அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள**

**SEA LINES COMPLEX**

021 - 226 3588 , 0602 - 212881 , 0602 - 212402

**வதிரி வீதி , உடுப்பிட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org